கணபதி துணை.

ஸ்ரீமத்

இராமஸ்வாமியா பிள்ளையவர்கள்

அருளிச்செய்த

# தத்துவப் பிரகாசம்

வைத்தியம்,

நெ திருமலைக்கமாரு பண்டிதரால்

வெளியிடப்பட்டது

---

கருவேலன் தண்டுத் தெரு,

திருநெல்வேலி.

Printed at the ARYAPIRAKASINI PRESS

Tinnevelly Bridge.

கணபதிதுணை.

# தத்துவப் பிரகாசம்.

---

இஃது

திருநெல்வேலி வடக்குத்தடிமுடுக்குத்தெரு

ஸ்ரீமத் இராமஸ்வாமிப் பிள்ளை யவர்கள்

திருவாய்மலர்ந்தருளியது.

---

ஷை யூர் தெற்குப்புதுத் தெரு

தமிழ் வித்வச் சிறப்பிற் மாட்சிமைபெற்ற

மகா-௱-௱-ஸ்ரீ சங்கரமூர்த்தி முதலியாரவர்களால்

எழுத்துக்களைப் பிழைதிருத்தி

ஷை சுவாமியவர்களின் பக்தனும்

ஷையூர் கருவேலங் குண்டுத்தெரு

பரம்பரை வைத்தியம்

கெ. இராமஸ்வாமி பண்டிதர் தம்பி

ஷை

கெ. திருமலைக்குமாரு பண்டிதரால்

வெளியிடப்பட்டது.

---

திருநெல்வேலிப்பாலம்

ஆரியப்பிரகாசினி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

---

1915-ம் ௵ மேமீ 5௳.

இதன் விலை] [அணா 4

உ

சிவமயம்.



ஸ்ரீமத் இராமஸ்வாமியாபிள்ளையவர்களென்ற

தத்துவப்பிரகாசசுவாமிகள்

# முகவுரை.

உலகத்தின் கண் ஆனந்தத்தையே அடைய விரும்புவார்கள் இவ்வானந்தமானது இகபரமிரண்டிலு முள்ளது இதனையடைவது விரதாதி முதலிய நோன்புகளென்று நிர்மாணித்து ஆனந்தம் இருப்பிடத்தைக் கவனியாது மிக்க அவஸ்தையோடு முயற்சை கொள்வது அந்தோ மிகவு ஆச்சரியப்படத்தக்கது யென்னவெனில் ஆனந்த வியல்பை இன்னதின்னதென விசாரிக்கப்படுவது தான்விவேகம் விவேகமென கூறுவது இதனை ஆங்கிலேயர் மூளை மூளையெனக் கூறுகிறார்கள் இந்த விவேகம் அடைய வேண்டுமானால் சாது சங்கப்பிறவர்த்தியை யன்றி முடியாது, ஏனெனில் இந்த விவேகத்தை அடைய முன்னவர்கள் அவரவர்களுக்குரிய மேலவர்களன்றி அடைந்திருப்பதில்லை. அதாவது ஸ்ரீ இராமபிரான் வசிட்டரிடமும் மாவலி, பகீரதன், ஜனகர், முதலியோர்த் தமக்குரிய ஆசாரியவர்களிடமும் அர்ஜுனர் ஸ்ரீ கிருஷ்ணபகவானிடமும் அடைந்தனரன்றிச் சுதாவாய் அடைந்தனரல்ல ஆகையால் நாமும் விவேகத்தை அடைய வேண்டியானால் சாது சங்கப்பிரவர்த்தியை யன்றி அடையப்படமாட்டாது இவ்வடைவினை அடையப்படாவிடில் விவேகம் பெற்று தன்னானந்தம் கண்டுபிடிப்பதும் அரிதாய் விடும் ஆனந்தமுங் கைவல்லியப்படா, ஆகையால் நாம் ஒவ்வொருவரும் தம்பாலுள்ள ஆனந்தங்கைவர வேண்டி சாதுவை அடுத்து விசாரணைபண்ணுவதோடு அதை யவர்கள் வினாவிடைப் பகுதியாகக்கூறப்படும் நூல்களைக்கற் றுணர்ந்துங் கேட்டுந் தெளிவைப்பெருவோமாக இத்தத்துவப்பிரகாசமாகிய நூலினிடத்தில் பழகப்பழகத் தன்னானந்தமாகிய சொந்த இருப்பிடத்தைக்கண்டு கேட்கவரும் இதுவேகுரு சம்பிரதாய குணப் பேறென பெற்றும்.

# ஸ்ரீமத் இராமசுவாமியாபிள்ளையவர்களின்

## சரித்திரம்.

உலகச்சிறப்பில் மிகவும் மேன்மைபெற்று விளங்கும் திருநெல்வேலியாகிய புண்யக்ஷேத்திரத்தில் வேளாளர்குலத்தில் சைவசிரோமணியாகிய ஸ்ரீ அழகப்பபிள்ளையவர்களின் குமாரர் இருவர்களில் இளையதன்மையையடைந்த ஸ்ரீமான் இராமசாமியாபிள்ளையவர்கள் வடக்குக்குடிமுடுக்குத்தெருவில் 1016-ம்ரு சித்திரைமீ பானுவாரத்தில் அசுபதி நட்சேத்திரத்தன்று ஜெனனமாகி, பாலப்பருவத்தில் செல்வமாய் வளர்க்க வளர்ந்து வித்தையப்பியாசத்தை கிரகத்தில் உபாத்திமை யேற்படுத்தி செல்வனாகத் தமிழ் அப்பியாசத்திற்கெவை அவசியமோ அவைகளை யாதொரு தடைகளில்லாமல் கற்று அறிவு வெளியான உயர்பருவம் வரவே தனக்கு தாய்மாமனாராயும் தமிழ்ச்சிறப்பில் சர்வ வித்துவத்துள்ள வண்டானம் ஸ்ரீ இராமசுவாமியாபிள்ளையவர்களிடத்தில் தனக்குப் பூர்வத்தொடர்பாயுள்ள வாசனை விருத்தியோடு அனேககாலம் அத்துவைதநிலையைத் தனக்கு அறிவிக்க வேண்டி அக்குறிப்பைப் பலபல தடவலுங்கேட்க இவ்வழி சிறுவர்களுக்கும் ஜகப்பற்றுள்ளவர்களுக்கும் இது வெகு தூரமானதையால் கூடாது ஆனாலும் இந்தவழியைத் தெரிந்துகொள்ளவேண்டுமானால் பின்பு அறிந்துகொள்ளலாம். இப்போது நமது குலத்தில் நீண்டகாலமாய் நடைபெற்றுவரும் பூஜாக்கிரம வழிகளையும், தேவாரச் செய்யுள்களையும் மற்றும் பல பாடல்களையும் என்னிடத்தில் நாள்தோறும் வந்து யெழுத்துச சொற்பொருள் சாம் இவைகளை நன்கறிந்துகொள்வாயாகவென்று கட்டளையிட்டனர்கள். அந்தப்பிரகாரம் அவர்கள் நோக்கத்தின்படி சொல்லுகிறதைக் கேட்க விரும்பினார்கள். அதாவது எதாமொரு காரியத்தை முன் பழகியிருந்தவர்களுக்கு பின் சுலபமாய்ச் செய்யச்சொல்ல வருவனபோல பூர்வபழக்கமுடையவர்களென்பது தோன்ற அதிதுரிதமாய்க் கேட்கவேண்டியதைக் கேட்டுத் தெரியவேண்டியவைகளைத் தெரிந்துகொண்டார்கள். இவ்வழியை அவர்கள் சூட்சியமாகத் தான்சொன்னதை யூன்றி யோசித்துப்பார்த்தால் நீண்டகாலமாய்ப் படிப்பிக்கும் பழக்கத்தினால் வரவேண்டியதாயிருக்க அது சீக்கிரமாய் வந்ததினால் இது விசேஷ அறிவுயென்றெண்ணி மேற்கோறிக் குறிப்பிட்டுக்கொண்ட தூயநிலையை அடையக் கிருபைகொண்டு அவ்வழிக்குரிய நூல்முறைகளைக் கூறியருளினர்கள். பின்னர் அம்முறை பிறழாது நூல்களை வாங்கித் தானே சிலது தோன்றியும் தோன்றாமலும் கற்றுவரும் நடையில் திருநெல்வேலி ஜில்லா ஓட்டப்பிடாரந்தாலூகா குலசேகரநல்லூரில் பிராமணர் குலத்தில் பிறந்த அனந்த

ராமசுவாமியென்னும் திருநாமத்தையடைந்து வேதாகமம் முதலிய நூல்களைத் தெளிவுபெறக் கற்றுணர்ந்து பிரமசாரியாய்த் தமது குலத்துக்குரிய ஆசாரியனையடைந்து சன்னியாசம் பெற்று கிருஷ்ணானந்தர் சுவாமியென்னும் திருநாமம் பூண்டு பிரமசொரூபியாயிருந்த ஸ்ரீ பரப்பிரம்ம ஸ்ரீ கிருஷ்ணானந்த சுவாமிகள் தேனீக்கள் பல மலர்களிடத்திலுமிராநின்ற மதுவை தானுண்ணும்பொருட்டு சேகரித்து பெருக்குற்றெழுவது தேவதாபிஷேக முதலிய ஔஷதங்களுக்குப் பிரயோஜனங்கொடுப்பதுபோல தன்னார்த்தமாகப் பிறவிநோயகற்ற முயற்சைகொண்டு சேகரித்த தன்னுணர்ந்தப்பெருக்கானது மற்றுள்ளோர் பிறவிநோயகற்ற உதவிபெருவாம் வேணடி பரிபக்குவமாய் குருநோக்காய் யெதிர்பார்த்து ஸ்தோத்தரித்துக்கொண்டிருந்த ஸ்ரீமத் இராமசுவாமியாபிள்ளையவர்களுக்காக ஆட்கொளவேண்டி வந்ததுபோல திருநெல்வேலிக்கு யெழுந்தருளி தெப்பக்குளத்தெருவில் நாம் கொஞ்சக்காலம் வசிக்கவேண்டுமென அருள்கொண்டு நிஷ்டானந்த பரமசொரூபியாயிருக்கிற யிருப்பைக் கேட்டமாத்திரத்தில் இரும்பினை இழுக்கும் காந்தம்போன்ற அவசரங்கொண்டு அஞ்சலியஸ்தராய் துரிதமாய் போயடைந்து தன் குறிப்பை வணக்கமாய் விண்ணப்பஞ்செய்ய உடனே புண்ணிய பலவிருத்தியினால் முகநோக்கி ஒப்புக்கொண்டு உட்காரச்சொல்லி குடும்ப இயல்பை விசாரித்து பெருமைபாராட்டி நன்கு மதித்துப் பக்குவஞ்சோதித்து அவ்விடம் பாடங்கேட்டுக்கொண்டிருந்த சற்சனர்கள் கூட்டத்திற் சேரும்படி ஆக்ஞாபித்து மேலும் இந்த சாதுசங்க அபிவிர்த்தியை விடாது பற்றிவருவாயென்றும் கட்டளையிட்டனர்கள். இந்தக்கட்டளையைக் கேட்டமாத்திரத்தில் அங்கமெல்லாம் புளகிப்ப ஆனந்தங்கொண்டு திடம்பற்றி நாள்தோறும் விடாது முயற்சைகொண்டனர்கள். இப்படிக்கொண்ட விருத்தியினால் குடும்ப விசாரிப்பை நோக்காமல் தமது ஸ்ரீ முத்துக்குமாரசுவாமியாபிள்ளையவர்கள் யென்னும் தமையனாரிடத்தில் நான் ஒரு விண்ணப்பமென்று கூற அதுயென்னையென்று கேட்க குடும்ப விவகாரங்களைத் தாங்களே யென்னைப் பொருட்படுத்தாது விசாரித்துக்கொள்ளுங்கள். அது யென்னை இப்படிப்பட்ட வார்த்தைசொல்லுவானேன் அதுவிஷயத்தை யெனக்குச்சொல்லென்று கேட்க அதாவது குலசேகரநல்லூரிலிருந்து சுவாமிகள் இவ்விடத்திற்கு வந்திருக்கிறார்கள். அவர்களிடத்தில் நான் வேதாந்த விசாரணை செய்துகொள்ளவேண்டியதினாலென அதுமுதல் விசாரித்துக்கொண்டு அவர்களுக்கு குடும்ப விவகாரங்களைப்பற்றி கேட்கவேண்டியதில்லாமல் தானே நடத்தி வந்ததோடு அவர்கள் விசாரணை விவரத்தையும் சந்நியாசமுதலிய வழிகளில் பிரியமுற்றிருக்கிற குறிப்பையுங்கண்டுணர்ந்து அதேநோக்கமாய் அவர்களுக்குச் சொல்லவேண்டிய விவகாரங்கள் ஒன்றில்லாமல் தானே நடத்தி

வந்தார்கள் இவற்றையெல்லாம் நோக்காமல் ஸ்ரீமத் சுவாமியவர்கள் எப்போதும் விசாரணைமுகத்தில் சதாவும் பழகி சங்கைகளெல்லாம் நன்குணரத்தெரிந்து தன் நிலையையும் பன்முறை ஐயந்திரிபறவுணர்ந்து அந்நிலையில் தடைகளொன்றுமணுகாமல் சுகப்பேற்றையடைந்து விசாரணை முடிந்து சாதகமான பழக்கம்விட்டு தானே தன்னிலையிலிருந்து சாத்திய நிலையான பருவத்தில் தம்மிடத்தில் விசாரிக்கவேண்டிய பக்குவமுடைய சீடர்களுக்குச் சொல்லவேண்டியதைச் சொல்லி நிவ்ருத்திப் பிரமானந்தத்தை நவநவமாய் அனுபவித்துக்கொண்டிருக்கையில் சில சிஷர்கள் தங்கள்தங்கள் இருப்பிடத்திற்கு ஸ்ரீ பரப்பிரம்ம ஸ்ரீ கிருஷ்ணேந்திர சுவாமிகளை உபசாரமாய் அழைத்துக்கொண்டுபோய் பூஜித்து திரும்ப அழைத்துவந்துவிடுகிற முறைபோல நாங்கூநேரியாகிய ஸ்ரீ வானமாமலைப்பெருமான் க்ஷேத்திரவாசியான ஒரு பக்தசிரோன்மணியான ஓரம்மணி அழைத்துப்போயிருக்கையில் அவ்விடத்திலேயே சுவாமிகள் பரிபூரணசித்தியடைந்து அக்ஷேத்திரத்தைச்சேர்ந்த இடத்தில் சமாதியடைந்தனர்கள். சமாதியின் பூஜாக்கிரமங்களை தாமுங் கூடவேயிருந்து நடத்தவேண்டிய முறை பிரழாது மிகவும் ஆடம்பரமாய் நடத்திவைத்தனர்கள். இந்த புண்ணியபலன் கிடைக்க வெத்தனையோ ஜென்மங்களிற் செய்த சற்புண்ணியபரிபாகமென்று கேட்டவர்கள் பார்த்தவர்கள் யாவரும் துதித்தனர்கள். இவற்றையெல்லாங் கேட்டுப் புகழ்கொண்ட தன்மையை வெளியேகாட்டாது தம்மிடத்தில் யேதாவது சங்கை கேட்கவந்தவர்களுக்கு தெளிவுகூறி முறைப்படி பாடங்கேட்க விரும்புவோர்களுக்கு கிரமப்படி சொல்லியனுப்புவார்கள் இவற்றை யோசிக்கும்போது மிக்க சாத்வீக தன்மையோடு இவர்களைப்போல யாருக்கும் போதகாசிரிய நிலைமை வராது. அவ்வழியில் இவர்களே மேலானவர்களென்பதைத் துணிவோடு கூறலாம். இவ்விசாரணை கேட்கவிரும்பினவர்களில் திருநெல்வேலி தெற்குப்புதுத்தெரு தொண்டமண்டல வாசிபாகிய ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி முதலியாரவர்கள் வயது கூடிய தளர்பருவினராயிருந்தும் இந்த பரிசுத்தமான தன்னிலையில் மிகவும் நோக்குற்ற தன்மையைத் தெரிந்தபோது அவர்களுக்கு விசாரணைமுறைப்படி கேட்டுத்தெரிய நாளும் பிரயாசையும் வேணுமேயென்று யெளிதில் விளங்கும்படி வசன நடையில் தத்துவப்பிரகாசமென்று நூல்ப்பெயரிட்டு ஆத்துமவிசாரப் பிரகரணம், ஆத்துமவிசாரத் தெளிதற்பிரகரணம் யென இரண்டு அத்தியாயமாக இந்த நூல் யெழுதி மேற்கூறிய ஸ்ரீ முத்துக்குமாரசுவாமிமுதலியாரவர்களுக்கு சுலபமாய்ப் படிப்பித்து ஐக்கியானுசந்தானத்தை ஐயந்திரிபற வுணர்ந்தத் தெளிந்துகொண்ட சிலகாலத்திற்குப்பின் சித்தியடைந்தனர்.

அவர்களுடைய சி[illegible] சமயத்தில் ஸ்ரீமத் [illegible]யவர்கள் போயிருந்து நிலைதவராது ஐக்கியானுபவத்தை சரிபார்த்துக்கொண்டனர்கள்.

இப்படிக்கு முன்னடந்த வர்த்தமானங்களை சிலசில விசாரணையின்போது சொல்லியருளார்கள். ஜீவன்முக்தியானந்தப் பெருக்கை மிகவும் அடையவேண்டி துறவுகொள்ளுவதற்காக வெளியே எகிச்செல்வ அவ்வவிடங்களைத் தனது தமையனாரவர்கள் முற்குறிப்புடன் இருந்த தன்மையினால் யென்ன தந்திரமாகவோ கண்டுபிடித்து உடன் கூடவந்தவர்களைப்போல பின்சென்று மன்றாடிக் கூட்டிக்கொண்டுவந்துவிடுவார்கள் இந்தப்படிக்கி இரண்டு மூன்றுதடவல் நடந்தபின்னர் தமையனாரவர்களும் காலஞ்சென்றனர்கள். தமக்கும் தளர்வெய்திய காலமாயின.

இப்படியான காலசடையில் தன்குடும்பத்தின் மேலோர்கள் ஸ்ரீ வேணுவலிங்கேஸ்வரர்க்கு ஒவ்வொரு வருஷத்திலும் நடக்கிற மார்கழிமீ ஆருத்திராதெரிசனக் கட்டளைக்கும் ஆனி உற்சவ ஐந்தாவது திருநாள் கட்டளைக்கும் யெழுதிவைத்ததான சாதனை முறைதவராது நடத்தி பின் பாத்தியஸ்தர்களால் சடைபெற்றுவர விந்தமூலமாய் ஒப்பிவைத்துவிட்டு திருநெல்வேலியில் தாம்பிரவர்ணி நதிதீரத்தில் திருக்குருக்குத்துறையாகிய ஸ்ரீ சிவசுப்ரமணியர் க்ஷேத்திரத்தில் திருவாவடுதுறை மடாலயத்தைச் சேர்ந்த மேட்டுமடத்தில் சமாதி செய்விக்கும்படி ஆபத்சன்னியாசத்தையடைந்து 1084-ம்ளு கிலகஸு கார்த்திகைமீ சோமவாரமும் அனுஷநக்ஷத்திரமுங்கூடிய சுபதினத்தில் அன்றிரவு $1\frac{1}{4}$ மணி அதாவது $18\frac{3}{4}$ நாளிகையில் சுயப்பிரகாசப் பெருக்கினாய் பிரமசொருபத் தயிக்கியமாகிய விதேக முக்த்தியை அடைந்தனர்ரன்.

இவற்றையெல்லாம் கடையேனாகிய யான் கேட்டுக்கொண்டபடி இந்த நூல் கிடைத்த காலத்தில் வெளிபபடுத்த பொருத்தமென்றெண்ணி இச்சரித்திரத்தை எழுதலாயினேன்.

இதிலுள்ள சொற்குற்றம் எழுத்துப்பேதகம் முதலியவைகளை இதனை வாசிக்கும புண்ணியவான்கள் ம[illegible]து ஒப்புக்கொண்டு இந்நூலின கருத்தின் பாகங்களை அறிந்து [illegible] எம்மை ஆசீர்வதிக்க வேண்டுமென்று [illegible]டுக்கொள்கிறேன.

இவர்களி—த்தில் பாடங்கேட்டுவந்த சீடர்களால் கூறப்பட்ட சாத்துக்கவி தோத்திரம் இவைகளையும் இதினுடன் சேர்த்திருக்கிறேன்.

திருபலைக்குடாரு.

கணபதி

சாற்றுக்கவி.

ஆசிரியவிருத்தம்

சீர்மிகு முப்பத்திரண்டாசந் தருநெல்லை
வெஸ்துல மதனில் வந்த
சீரப்புரு மிராமஸ்வாமியா பிள்ளைநின்
சீடருக் கருளவேண்டி
பேர்மிகு தத்துவப் பிரகாச மெனுநூலை
பிஞ்ஞக னருள்கொண்டு தான்
பின்னுமோர் தன்னுருவம் பிழையறக் கண்டுதன்
பிறவிநோ யகற்றுமாறு
சேர்மிகு வசனமாய் நிலைதனை நிலைப்பித்த
சேர்மையை யெஞ்சொல்லுவேன்
நித்தனுஞ் சத்தியமொழி நேசனுங் கருணைதரும்
நிர்மலப் பொருளதான
கூர்மிகு தமிழ்வலோய் குணமுடனருளியது
குன்றெனத் தருஞ்சகத்தை
குசலனே அழகப்ப பிள்ளைதன் குமரனே
கோதிலாக் குணசீலனே.

வெண்பா.

இந்தப் புவியி லிந்நா ளிதுவரையு ர்
தங்கம் நிலையறிந்து சாற்றுவரில் இந் த
இராமசுவா மிபெயரோ னீன்றளித்த நூல்போ ல்
தராது தன் னியற்கை குணர்ந்தா ன்
இந்தச் சகத்குருவாயிருந்த கிருஷ்ணநேந்த ளர
சொந்தப் படுத்திநிலை துணிவுகொண்டு சந்ததமு ம்
தன்னுணர்ந்தநிலை சாரும்படி தானுரைத்தா ர்
தன்னுணர்ந்த விராமசுவாமி தா ன்

குருவாக்கியங் கூறுமிடத்துத் தடைகள் வராது காப்பதற்கு
ஸ்ரீ கணபதி மூர்த்தியைத் துதித்தல்.

விருத்தம்.

ஐயன் சொன்னவமுதமொழி யாருமறிந்து யானினைந்து
மெய்யன் கணேசமெய்ப்பொருளை மேவியணிந்து ஓர்நாளில்
செய்யத் துணிந்தேன் புத்தகமாய் சித்திபெற்ற விநாயகனே
ஐயப்பா நின்னருள் தருவாய் யானைமுகத்து ஐங்கரனே.

உ

சிவமயம்.

கணபதிதுணை

ஸ்ரீ சற்குருநாயகன் அற்புத உபய பாதங்களே துணை.

இஃது

# தத்துவப் பிரகாசம்.

கணபதி திருவடி துணை—கந்தன் திருவடி துணை
சரஸ்வதி திருவடி துணை—தத்துவ ஞானிகளின் திருவடிகள் துணை
சமஸ்த அடியார்களின் திருவடிகள் துணை.

## முதலாவது ஆத்தும விசாரப் பிரகரணம்.

சூரியனது கிரஹணத்திலகப்பட்டு சகிக்கமாட்டாமல் துடிக்கின்ற கிருமியைப்போல் சம்சாரமென்கின்ற கொடிய தாபத்தினாயாக்கினியிலகப்பட்டு சகிக்கமாட்டாமல் மனமானது வெள்ளரிப்பழம்போல வெந்து மகாவெப்பமுற்றிருந்த ஒருவன் அவன் கீழ்ப்போன அனந்த ஜென்னங்களிற் செய்திராநின்ற நிஷ்காமியபுண்ணிய பரிபாகத்தினால் அவனுக்கு சித்த சுத்தி பிறந்து அச்சித்த சுத்தியினால் சம்சார வாழ்க்கையும் விஷய போகானுபவங்களுந் துன்பமென முதலிற்றோன்றி பின்பு அவைகள் முதலான சமஸ்த்துன்பங்களுக்குக் காரணம பிறவியேயெனவும் அப்பிறவி கெடில் துன்பங்கள்யாவும் ஒருங்கே நசிக்குமாதலால் அதையே அவசியம் கெடுக்கவேண்டுமெனவும் அதைக் கெடுப்பதற்கு மார்க்கமெப்படியெனச் யோசித்தல் ஞானிகள் தாங்களது பிறவியை ஞானத்தினாலே கெடுத்து துன்பங்கள் யாவையும் நிவர்த்தித்து சுகமயமாகி உலகமுய்வதற்கான இடங்களிலுமிருப்பாராகவென்னப்படுதாய் உலகத்தார் சொல்லிக்கொள்கிற அந்த ஞானிகளைக்கண்டு தரிசித்து அவர்களாலேயேதாம் ஈடேறவேண்டுமென தனக்குள்ளே தீர்மானஞ்செய்து உடனே அந்த ஞானியைத்தேட யெத்தனித்து தனது ஸ்திரி புத்திராள் முதலான உறவுசார்புகளையும் இரதகனகனம் பூமிமுதலான பொருள்சார்புகளையும் ஒருங்கேவிட்டு நீங்கி அனேக தேசங்கள் காடுகள் மலைகள் குகைகள் வனங்கள்முதலான இடங்களிலெல்லாமிருந்த பரிதாபத்துடனே ஆசாரியனைத்தேடிப்பார்த்துக்கொண்டு வருகையில் சிங்காரவனத்தின் சுனையில் உபசாந்தாதி ஆசாரிய இலட்சணங்கள் சகலமும் நிறைந்து ஞான சூரியப்பிரகாசமாயெழுந்தருளியிருந்த ஒப்

பற்றாசற்ற நாயகனை இரண்டு கண்களாற் குளிரத்தரிசித்து திரிகரண சுத்தியுடனே வலப்பிரதக்ஷணம்வந்து சென்னிமேற்கரங்குவித்து சுவாமி உமாகபாயமல் லெனது பிறவியை வேரறக்கெடுத்து என்னையுமடிமை கொண்டு இரக்ஷிக்க வேண்டுமெனக்கூறி திருவடியில் சாஷ்டாங்கமாக அஞ்சலிசெய்தனன்

அங்ஙனம் அவையக்கூறி தனது சேவடியில் சாஷ்டாங்கமாக அஞ்சலிசெய்து எழாமலிருக்க அச்சீடனைப் பார்த்து ஆசாரியர் திருவையுடன் ஞானாசாரியர் ஒருதரம் கிருபா விக்ஷணம்பண்ணியபார்த்து அப்பா சிஷா நீ அஞ்சற்க தொன்று தொட்டு தொடர்ந்துவருகின்ற உனது பவத் துன்பத்தை நாம் நீக்குகிறோம் நமக்கு கிருபை வருமளவும் நமது பணி விடைகளைச் செய்துகொண்டிரு யெழுந்திருவென்று ஆசாரியர் கட்டளை யிட்டருளினர்

அங்ஙனம் ஆசாரியர் கட்டளையிட்டருளியதை சீடனானவன் கேட்டு மகா சந்தோஷத்தையடைந்து எழுந்திருந்து அது முதல் பன்னிரண்டு வருடம் வரை மிகுந்த சிரத்தை அச்சமுதலானதுகளுடனே ஆசாரிய ரது சகல பணிவிடைகளையுங் குறைவறச்செய்து வந்தனன்.

அங்ஙனம் பணிவிடை செய்து வந்த சீடனது பக்குவ பரிபாகங் களையெல்லாம் பன்னிரெண்டுவருடம் வரை ஆசாரியர் சோதித்து வந்ததில் பந்தத்துக்கு கேதுவான அகங்காரம் மமாகார முதலான இராகத்து வேஷாதி துர்க்குணங்கள் யாவுமின்றி வீட்டைவதற்கேதுவான நித்தியா நித்தியவஸ்து விவேகம் இகமுத்திரார்த்த பலபோகவிராகம் சமாதி சட்க சம்பத்தி முமூட்சுத்துவமாகிய சாதன சதுட்டயகுணங்களையும் அடங் கின விருத்தியையும் அவன் அடைந்திருப்பது கண்டு ஆசாரியர் மிகவுஞ் சந்தோஷித்து இவன் பக்குவிதான் இவனுக்கு இனிமேல் உபதேசிக்க லாமென்று தீர்மானித்து ஆசாரியர் சீடனுக்கு உபதேசிக்கத்தொடங்கு முதற்கண் அவனது யதார்த்த சொரூபமின்னதென்று அவனுக்கு விளங் கும் பொருட்டு அவனிடத்தில் சில கேள்விகள் கேட்கின்றார்.

அஃதாவது அப்பா சிஷா சகல விகாரங்களையும் நான் காணேன் றவிவாசிக்கின்ற நீ யார் உனது சொரூபம் யாது நீ கூறுவாயா யென் றனர்,

சீஷன் உத்திரம்

சுவாமி அடியேன் ஒவ்வொன்றும் தெரியாத மூடனென்று எனது சரீரமே நான் எனது சரீரவடிவமே எனது சொரூபமு மென்றனன்.

## ஆசாரியர் சங்கை.

சரீரமே நானெனக்கூறிய சீடன் வசனத்தை ஆசாரியர் கேட்டு புன்னகைகொண்டு அப்பா சரீரமே நீயானால் இந்திரியங்களொடுங்கிய சொப்பனாவஸ்தையில் ஓரேயிடத்தில் உனது சரீரம் பிரேதத்தன்மையை அடைந்திருக்க அச்சமயத்தில் அச்சரீரத்துக்கு புறம்பாயுள்ள அன்னிய தேசங்களில் நீசஞ்சரித்தது போலவும் அவ்விடங்களில் அனேகவினோதங்களைப்பார்த்து சந்தோஷித்தது போலவும் போகாதிகளை அனுபவித்தது போலவும், பின்னும் அனேக விவகாரங்களைச் செய்ததுபோலவும், உள்ள அவ்விவகாரங்களை நடத்தினவனார் நீ சொல் யென்றனர்

## சீடன் உத்திரம்.

சுவாமி சொப்பனத்தில் அப்படிப்பட்ட விவகாரங்களை நான் செய்ததாயிருந்தால் யெனது சரீரந்தான் அவ்விவகாரங்களை நடத்தியிருக்கவேண்டும். அதையன்றி அப்படி நடத்துவதர்க்கான பொருள்கள் வேறொன்றையுங் காணவில்லையே யென்றனன்.

## ஆசாரியர் சங்கை.

ஆனால் சொப்பனாவஸ்தையில் பிரேதத்தன்மையை அடைந்திருந்த உனது சரீரமானது அச்சமயத்தில் மேற்கூறியபடி அன்னியதேசங்களுக்கு சென்றிருக்கவேண்டுமே அப்படிச்சென்றதுண்டா, இதை நன்றாய் நீ யோசித்தால் மற்ற அவ்விவகாரங்களை சரீரம் நடத்தினதாக நீ கருதினது பிழை யெனவே பின்பு உனக்குத்தோன்றும் யென்றனர்

## சீடன் உத்திரம்.

சொப்பனாவஸ்தையில் சரீரமானது ஓரிடத்திற்குஞ் சென்றதில்லைத்தான் ஆனால் இந்திரியங்களொடுங்கிய சொப்பனாவஸ்தையிலென்று தேவரீர் மேற்கூறினதை ஆராயின் அவ்வவஸ்தையில் இந்திரியங்களொடுங்கிற்றென்பதும் மனமாதிகரணங்கள் ஒடுங்கினதின்றென்பதுமாயிற்று ஆதலின் அம்மனமாதிகரணங்களே அவ்விவகாரங்களை நடத்தியிருக்கலாம். அக்கரணங்களும் சரீரத்திற்கு வேறின்மையால் அக்கரண விவகாரங்களும் சரீர விவகாரந்தானே யென்றனர்.

## ஆசரியார் சங்கை.

மனமாதி கரணங்களுடனே நீயுங்கூடினால்தான் அதுகள் தொழில் பட்டுவிளங்குமேயன்றி சுதாவாய் விவரிக்கின்ற சக்தி அவைகளுக்கு

யெவ்வளவுமில்லையென்பதை நாம் சொன்னால் அது உனக்கு இப்போது மனதில்ப்படாது அது நிற்க. அந்த மனமாதிகரணங்களும்ஒடுங்கினதாயும் ஸ்தூல சூக்ஷும சரீரத்தன்மைகளை கடந்திருந்ததாயுமிருக்கின்ற சுழுத்தியவஸ்தையின் கண் சுகமாயிருந்த ஒரு சுகத்தை அப்போதனுபவித்து அறிந்தவனும் அதை அவ்வவஸ்தை நீங்கிய சாக்கிரத்தில் பிறரோடுரைத்தவனும் ஆர் இதை நீ கூறென்றனர்.

## சீடன் யோசித்து ஒப்புக்கொள்ளுதல்.

அங்ஙனம் ஆசாரியர் கூறக்கேட்டுணர்ந்த சீடன் யோசித்து கூறுகிறான். அதாவது சுழுத்தியிலுள்ள சுகத்தை அப்போது நானனுபவித்தறிவதும் அதைச்சாக்கிரத்தில் பிறரோடு கூறுவதும் பிரதிதினம் எனக்குள்ள அனுபவந்தான். அங்ஙனம் பிரதிதினம் அனுபவமாய் அறிந்துவருகிறதும் சரீரந்தானென்று கூறுவதற்கு ஸ்தூல சூக்ஷும சரீரத்தன்மைகளைக்கடந்து அச்சுழுத்தியின் அனுபவம் நிற்பதால் அங்ஙனம் கூறுதற்கிடமேயில்லை.

இதுபோல் சொப்பனத்திலுள்ள விவகாரங்களையும் சரீரமானது நடத்தியிருக்காததுதான், தேவரீர் கூறியது உண்மையே. ஆனால் சரீரத்திற்குள் அச்சரீரத்தை அன்னியில் வேறே என்னமோ ஒருபொருளிருந்து தானே அப்படிக்கெல்லாம் நடத்திக்கொண்டிருக்கின்றது அந்தப்பொருள் இன்னதென்று தேவரீர் அடியேனுக்கு திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்றனன்.

## ஆசாரிய ருத்திரம்.

அப்பா சரீரம் சரீரி யென்பதாய் இரண்டு. அதில் பஞ்சபூதங்கள் ஒன்றுகூடி தோன்றிய சரீரம், சடம் அறிவாகிய, சரீரி, சித்து, அச்சித்தே அகண்டாகார சுயம் சைதன்னியமான பிரமம் அப்பிரமமே நீ நீயாகிய பிரமமே அவ்வவஸ்தாதிரைய விவகாரங்களுக்காதாரமாக யிருந்தது சடமாகிய சரீரம் நீயல்ல ஆகலின் சரீரம் நாமல்ல சரீரியாகிய பிரமமே நானென்றுணரும் உணர்வே தன்னையறிவது அங்ஙனம் தன்னையறிவதே முத்தி என்று ஆசாரியர் சீடனுக்குபதேசித்தனர்.

தேகம் தேகி எனக்கூறுவதும் இச்சரீரத்தையும் இச்சரீரியையுமே யன்றி வேறல்லவென்றறிக,

சூரியனது கிரஹணத்திலகப்பட்டு திரும்பியானது வெப்பமுற்றது போல சமுசாரமென்கிற தாபத்திரையாக்கினியிலகப்பட்டு சீடனும் வெப்பமுற்றனனென்பதற்கு உதாரணம்,

## கைவல்லி நவநீதம்

இவனதிகாரியானா னிந்திரியங்களாலு ம்
புவனதெய்வங்களாலும் பூதபௌதிகங்களாலு ந்
தவனமூன் றடைந்து வெய்யிற் சகித்திடாப் புழுப்போல்வெம் பி
பவமறு ஞானதீர்த்தம் படிந்திடப் பதறினா னே

கீழ்ப்போன ஜெனனங்களிற் செய்திரா நின்ற நிஷ்காமிய புண்ணிய பரிபாகத்தினால் சித்தசுத்தியும் அச்சித்த சுத்தியால் விசாரக்கியான முமுக்ஷுக்குமென்பதற்கு தாரணம்

## கைவல்லியநவநீதம்

போன ஜென்மங்க டமிலனுட்டித்த நற்புண்ணிய பரிபாக ம்
ஞானமாகுமே விசாரமே னென்றிடி னுமுரைத்திடக் கேளா ய்
ஆன புண்ணிய மீசுரார்பணஞ்செயி னசுசிபோஞ் சுசியாகு ம்
மானதம்பினை விசாரித்து ஞானத்தை மருவுமென் றறிவா யே

உயிர்சார்பு பொருட்சார்புகளை விட்டுநீங்கி ஆசாரியரைத்தேடித் திரிசித்தனனென்பதற் குதாரணம்.

## ஷை

ஆனவிம் மனைவிமக்க ளர்த்தவீடணைகள் மூன்றி ற்
கானவர் வலையிற்பட்டு கைதப்பியோடு மான்போ ற்
போனவன் வெருங்கையோடே போகாதவண்ணஞ்சென் று
ஞானசற் குருவைக்கண்டு நன்றாக வணங்கினா னே

சரீரமே நீயானால் சொப்பனவிவகாரங்களை நடத்தினவனும் சுழுத்தியில்சுகத்தை அனுபவித்தறிந்தவனும் அதைச் சாக்கிரத்தில் பிறரோடுரைத்தவனும் யாரென்பதர்க்குதாரணம்.

## ஷை

தேகமல்லாமல் வேறே தேகியார் காணேனென்றா ய்
மோகமார் கனவில் வந்து முளைத்திடுமவனார் சொல்வா ய்
சோகமாக் கனவுதோன்றா சுழுத்தி கண்டவனார் சொல்லா ய்
ஆகநீ கனவிலென்னு மறிவுதானேது சொல்லா ய்

அவ்வவஸ்தாத்திரா யானுபவங்களை சீடன் ஒப்புக்கொண்டன னென்பதற்குதாரணம்

ஷை.

நனவு கண்டதும் நான்கண்ட நனவுள நினைவு நீங் கி
கனவுகண்டது மிரண்டுங் காணாத சுழுத்திகண்டு ங்
தினமனுபவித்த லொக்கும் தெரியவுமில்லை சற் றே
மனதினி லுதிக்கும்பின்னை மறைக்கும தருளுவீ ரோ

பந்தத்துக்கேதுவானது அகங்காராதி துர்க்குணங்களென்பதற்கு. உதாரணம்.

கைவல்லிய நவநீதம்.

திகழ்ந்த வீசனார் சிருஷ்டியுஞ் சீவனார் சிருஷ்டியும் வெவ்வேறே
சகந்தனிற் பொதுவீசனார் சிருஷ்டிகள் சராசரப்பொருளெல்லாம்
அகந்தையா மபிமானங்கள் கோபங்களாசைகளிவையெல்லாம்
நிகழ்ந்தசீவனார் சிருஷ்டிகளாகுங்காணிமலனார் செயலன்றே அந்தியும்,

மூவரும் பரன் சிருஷ்டிகளுயிர்க்கெல்லாம் முத்திசாதனமாகும்
சீவனாது சிருஷ்டிகடங்களை ஜெனிப்பிக்கும் பிணியாகு ந்
தாவராதிகண் சித்திடிலொருவர்க்குஞ் சனனங்கள் நசியாவா ம்
கோபமாதிகள் நசித்திடிற் பந்தமாங்கொடும் பிறவிகள் போமே

1. காமம், 2. வெகுளி, 3. மயக்கம். 1. மோகம், 2. கோபம். 3. மாய்கை

திருக்குறள்.

காமம் மயக்க மிவைமூன்றன் நாமங் கெடக் கெடுநோய்,

நோயென்பது பிறவி.

வீட்டைடைதற்கேதுவான சாதனசதுஷ்டயமும் அடங்கின விருத்தியுமென்பதற்கு வுதாரணம்.

குமார தேவர்.

மேலாஞ்சதுட்ட சாதனங்கள் மேவிநிறைந்த பேர்க்குரைக்கி ன்
மேலாமது நானெனத்திடமாய் விளங்கு மவையிலாதார்க் கு
மேலாம் பரமன்மான்மழுவாய் விளங்கியுரைத்தும் விளங்கா து
மேலாஞ் சாதனங்கள்வரமேவ வேண்டுஞ்சாதுசங்க ம்

கைவல்லியம்.

அடங்கிய விருத்தியானென் றறிந்தபின் செறிந்த மண்ணி ன்
குடம்பையுட்புழு மூன்றூதுங் குளவியின் கொள்கைபோ ல
தொடங்கிய குருவு மான்மசொருபமே மருவவேண் டி
உடம்பினுள் சிவனைப்பார்த்துபதேசமோதுவா ரே

பிரமமே நீயென்பதற்கு உதாரணம்

ஞானவாசிட்டம் பிரமஉபதேசவிலக்கணங்கூறல்

இயற்கைகுணஞ் சோதித்து முன்னே பின்னே யாவையுமாம் பிரம நீ யென்னல்வேண்டும் வியப்புரவாசையிலுழல் வார்க்கிவ்வாறோதின் மீளாத நிரகரில் வீழ்த்ததாகுந் தியக்குறு போகத்தாசை தீர்ந்து புத்தி தெளிந்த வுனைப்போல் வார்க்கேதி கழத்தோன்று மயக்க மறவுணர்த்த வல்ல குருவைக் கிட்டா வருந்தி யுந்தன் பிறப்பறுக்கு மகனு மாங்கே அந்தியும்

வள்ளலார்

பஞ்சபூத நீயல்லை பஞ்சகோச நீயல் லை
விஞ்சகாணம் நீயல்லை விகுதிபகுதி நீயல் லை
துஞ்ச சிவன் நீயல்லை தோன்றும் பரமு நீயல் லை
செஞ்சிற்சிறிதுமையுறேல் நீயேயந்தப் பரமசிவ ம்

சொரூபசாரம்

அப்பா சகத்தோற்ற மாதாரமெல்லா நீ
பொய்யாது சோதியெனப் போதித்தான் "மெய்யாக"
உற்றுணரின்றெனன் றுமையாரொருவரில் லை
முற்றுணர்வா நானேமுதல் அந்தியும்

ஷை

சாயை யெனவாழ் குடும்பந்தன்னைச் சுமந்தா னு
மாயை பெருமேக மறைத்தாலுந் தூயவொ ளி
தானய் விளங்கிச் சகச சாக்ஷியாயிருக் கு
ஞானதித்தன்ஞானேநாம் அந்தியும்

## சொரூபசாரம்.

ஏதேது வந்தாலுமேதேது செய்தா லு
மேதேதிலின்புற்றிருந்தாலு மேதேது ந்
நானாகாவண்ணந்தனியே தெரிந்திருக் கு
ஞானாகாரந்தானே நா ம்

தன்னையறிவதே முத்தியென்பதற்கு உதாரணம்

### கைவல்லியம்

தன்னையுந்தனக்காதாரத் தலைவனையுங் கண்டானே ற்
பின்னையத்தலைவன்றானாய்ப்பிரமமாய் பிறப்பு தீர் வ
னுன்னை நீயறிவாயாகி லுனக்கொரு கேடுமில் லை
யென்னை நீகேட்கையாலே யீதுபதேசித்தே னே

பின்னும் வருணவைகளாலறிக

### சீடன் சங்கை

அங்ஙனம் பிரமமே நீயென்று சீடனுக்கு ஆசாரியார் உபதேசிக்க அச்சீடன் நெடுங்காலமாய் தன்னை மறந்து விட்ட மறதியினால் பிரமம் நாமெப்படியாவோமென்று நினைத்துக்கூறுகிறான் சுவாமிபிரமமே நீயென்று தேவரீர் அடியேனுக்கு திருவாக்கினால் அனுக்கிரகஞ் செய்ததுபோலவே உதாரணங்கொடுத்த சுருதிகளுமப்படியே கூறுகின்றது ஆகினும் நித்தியம் சச்சிதானந்தம் சாக்ஷி பரிபூரணம் யேகமுதலிய இலக்ஷணங்கள் பிரமத்துக்கு இயற்கையாகவுள்ளதே அப்படிக்குள்ள குணங்கள் என்னிடத்திலென்ன விருக்கின்றது ஒன்றுமில்லையே பின்னை நான் யெப்படிப்பிரமமாவேனென்றனன்

### ஆசாரிய ருத்திரம்.

பிரமத்துக்குள்ள மேற்கண்டகுணங்கள் யாவும் உன்னிடத்திலே யேதானிருக்கின்றது. அதற்கு எவ்வளவுஞ் சந்தேகமில்லை என்றனன்.

### சீடன் சங்கை.

அக்குணங்களென்னிடத்திலிருந்தால் அவைகள் விளங்கிறது எனக்குத்தெரியுமே அங்ஙனம் அவைகளிருந்து விளங்கினதுமில்லை அ[illegible]

நான் கண்டறிந்ததுமில்லையே அப்படியிருக்க அவைகள் உன்னிடத்திலே யேதானிருக்கின்றதென்று நீர் கூறுவது போல சுருதிகளும் அப்படியே கூறுமா வென்றனன்.

## ஆசாரிய ருத்தரம்.

நல்லது அப்படியே சுருதிகளுங்கூறினால் நீ ஒப்புக்கொள் அப்படி இல்லை எனில் வேண்டுவதில்லை அந்தப்படியே கூறுகின்ற சுருதிகளை நாம் கூறுகிறோம் நீ கேளென்று அவ்வாக்கியங்களை எடுத்துக்கூறுகின்றார்.

## கைவல்லியம்.

சத்தொடு சித்தானந்தஞ் சமர்திரஞ் சாக்ஷியேக ம்
நித்தியம் வியாபியான்மா நீயதுவாயதிந் தி
பொத்தொடு சடந்துக்காதிப் பொருந்து பேதங்களா ண
சூத்திரபஞ்ச கோசக்குலைவிட்டு வெளியிலாவா ய்

ஷை.

அதில் சத்தென்பதற்கு அனுபவ வாக்கியங்கூறல்

ஜென்மாந்தரஞ்செய்த வினைகளுடற்றருமெனிற் செலகாலமிவ னுண்டலோ கன்மானுபவ நரக சொர்க்கமெனில் வருகின்ற காலத்துமிவ னுண்டலோ வுன்மாதயாதனுவுடல் கடவுளுடன் மனுடவுடல் மாறிமாறி வழியுந் தன்மாயவுடல் கெடினுமிவனிருப்பதுகொண்டு சத்தென்பதொக் குமகனே இவ்வாக்கியமே நித்தியமென்பதையும் விளக்கிற்று.

## சித்தென்பதற்கும், ஆனந்தமென்பதற்கும், அனுபவாக்கியம் கூறல்.

இருளாக மூடுஞ் சுழுத்தியிலிருந்திரியிலிரவி சுடறற்றபொழுது மருளாம
லிருளையும் பொருளையுந் தெரிகின்ற வகைகொண்டு சித்தாகுமே
பெருவாழ்வு மிக்கதானே தன்னிடத்தினிற் பெருத பிரியமதனு
லருகாத பிரியஞ்சுகத்தில் வருமாதலாலானந்த மாமைந்தனே.

பின்னும் வருவனவைகளாலறிசீ

டன் ஒப்புக்கொண்டு மேற்கூறுதல்.

சுவாமி நீர் கூறிய சுருதிவாக்கியங்களின் சாராம்சத்தினால் பிரமத் துக்குள்ள சகல குணங்களுமென்பா லிருக்கின்றதென்றுணர்ந்தேன். ஆனால் தேகாதிப் பிரபஞ்சங்களோடு சம்மந்தம் அநாதிகூடி விவகரித்தல்

அதுகளை அனுபவித்தல் முதலியகுணங்கள் என்னிடத்திலிருக்கின்றதே இக்குணங்கள் பிரமத்துக்கில்லையே பிரமத்துக்கில்லாத இந்தக்குணங்கள் தான் பிரமமாயிருக்கிற விஷயத்தில் யென்னிடத்தில் விளங்குவானேன் யென்றனன்.

### ஆசாரிய ருத்தரம்.

அப்பா சிஷா உன்னிடத்தில் அப்படிப்பட்ட குணங்கள் சற்றுமில்லையே யென்றனர்.

### சீடன் சங்கை.

என்னையா சுவாமி என்வீடு என்மாடு என்காணி என்பூமி என்சொத்து என்பதார்த்தம் எனவருகின்ற பொருட் சார்புகளையும் என் ஸ்திரீ என்புத்திரன் என்தாய் என்பிதா என்சகோதரன் எனவருகின்ற உயிர்ச் சார்புகளையும் நமதென்றபிமானிக்கிற சம்மந்தங்களும் ஒன்றைஉண்டாக்குதல் அழிக்குதல் போதல்வருதல் ஆடுதல்பாடுதல் ஆனந்தித்தல் துக்கித்தல் பார்க்குதல் கேட்குதல் முதலிய தொழில்களாகிய விவகாரங்களும் நற்சயனம் நற்போசனம் நற்சுகந்த பரிமளவாசனைகளணிதல் நல்லவஸ்திராபரணங்களணிதல் சங்கீதசாயித்தியக்கேள்வி மாதர்கூட்டுறவு முதலிய பஞ்சவிஷய போகங்களை அனுபவிக்கிற அனுபவங்களும் எனக்கு எக்காலமும் இடைவிடாமல் பிரத்தியக்ஷமாயிருக்கிற குணங்களைச்சற்றும் உன்னிடத்தில் இல்லையென்று நீர் மேற்கூறிய தென்னவென்றனன்,

### ஆசாரிய ருத்தரம்.

மேற்கூறப்பட்ட பிரபஞ்ச விவகார முதலிய குணங்கள் பிரத்தியக்ஷமாய் உன்னிடத்திலிருக்கிறதாக நீ கூறியதெது போலாகுமெனில், சொல்லுகிறோம் கேள். கட்டையிற்றோன்றிய புருடன் மகளான மித்தியாவதியின் பேரன் அத்தியாசனென்பவன் தான் சொற்பனக்கன்னியர்களை மிகுந்த விமரிசைகளுடன் மணம்புரிந்தது போலவும் நாடோறும் அக்கன்னியர்கள் முதலான ஸ்திரிகளுடன்கூடி காமரச சுகபோகங்களையும் மற்றுஞ் சமஸ்த போகங்களையும் சுகித்துவருகின்றதுபோலவும் மற்றுஞ் சமஸ்த போகங்களையும் செல்வம் யீட்டுதல் முதலான பலவிஷயங்களிலும் பெரிய பெரிய விவகாரங்களை செய்து வருகின்றது போலவும் உன்னிதமான சகல செல்வங்களுடன் பிரபலமாய் வாழ்ந்து வருகின்றது போலவுமே அவ்வத்தியாசனெனவன் நித்தியனாகிய ஒரு விவேக புருடனிடத்தில் பிரஸ்தாபித்தனன்,

அங்ஙனம் அவன்பிரஸ்தாபித்ததையெல்லாங் கேட்டுக்கொண்டிருந்தஅந்த விவேக புருடனானவன் அவனைப் பார்த்து குலுங்கச் சிரித்துக் கூறுகிறான் அப்பா ஜெகத்தோடு கூடிப் போகித்தல் விவகரித்தல் முதலானவைகளை உன்னதமாக நீ யடைந்திருக்கின்றது போல வெகு பிரபலமாய் நீ மேற்கூறியவைகளில் ஒன்றாவது உன்னிடத்தில் சற்றும் இல்லவே இல்லை நீ கூறியதெல்லாம் பொய்மையென்று விவேக புருடன் கூற அதைக்கேட்ட அவ்வத்தியாசனானவன் என்னய்யா ஸ்திரி புத்திராள்முதலான பந்துஜனங்களென்ன? பெருமிதமான செல்வங்களென்ன? அதனால் சேரிடும் விவகாரங்களென்ன? மிகளீர் கூட்டுறவு முதலான சமஸ்த விஷயபோகங்களை அனுபவிக்கிறதென்ன? இப்படிக்குள்ள குணங்களென்னிடத்தில் பிரத்தியட்சமாக யிருப்பவைகளை சற்றும் உன்னிடத்திலில்லவேயில்லை என்று நீ கூறியது பொய்மையென்று நீர் கூறியதென்னவென்று அவன் தன்னனுபவத்தை வெகு நிட்சயமாக அந்த விவேக புருடனிடத்திற்சொல்லி சாதித்தானென்கிற கதைபோலவேதான் நீ என்னிடத்தில் மேற்கூறியதுமாகுமென்றனர்.

### சீடன் கூறுதல்.

அங்ஙனம் ஆசாரியருரைத்த அத்தியாசன் சரித்திரங்களையெல்லாங் கூர்மையாய்க் கேட்டுணர்ந்த சீடன் கூறுகிறான். அய்யா ஆசாரி சுவாமிகளே தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய அத்தியாசன் சரித்திரங்களில் பொய்களெல்லாம் அமைந்திருக்கின்றது, அப்படி முழுப்பொய்மையாயிருக்கின்ற அவ்வத்தியாசன் அனுபவங்களைப் போல எனது வாழ்க்கை. அனுபவங்களும் அவ்வளவு பொய்யாவென்று சீடன் கேட்டனன்.

### ஆசாரிய ருத்தரம்.

ஆம் அந்த அத்தியாசனென்பவன் சரித்திரங்களுக்கும் நீ எதை எதை எப்படியெப்படி நடத்துகின்றனையோ அந்தநடபடிக்கையாதி சமஸ்த உன் விவகாரங்களுக்கும் எவ்வளவும் வித்தியாசமேயில்லை. இரண்டுஞ் சமத்துவந்தான். இது உண்மை என்றனர்.

### சீடன் கேள்வி.

ஆனால் சுவாமி தேவரீருரைத்தபடி என் விவகார முதலான வாழ்க்கை அனுபவங்கள் பொய்மை என்பதற்கு ஏதாவது சுருதிப்பிரமாணங்கள் உண்டாவென்றனன்.

## ஆசாரிய ருத்தரம்.

ஆம் இருக்கின்றனவென்று அவ்வாக்கியங்களை யெடுத்துக் கூறு கின்றனர்.

## கைவல்லிய நவநீதம்.

மலடி மைந்தனூர் தானுவும் வீற்புருடனு வான்மலர் மூடிசூ டி
இலகு கந்தற்பநகரிலே சுத்திகை பிரசதம் விலைபேசி த்
கலகமாயினரிடையினிற் கயிற்றராக்கடித் திருவருமாண்டா ர்
அலகையாயினரெனும் விவகாரத்தை யதிர்தவன் மயங்கா னே

பின்னும் வருவனவற்றுலறிக.

## சீடன் சங்கை.

சுவாமி நீர் திரிகாலவர்த்தமான முதலான யாவையும் கசடறத்தெ ரிந்துணர்ந்த மூர்த்தி நீர் கூறியதெல்லாம் எதார்த்தமாகவே யிருக்கு மென்பதற்கு அய்யமில்லை. ஆனால் என் விவகாரமுதலான வாழ்க்கை அனுபவங்கள் பொய்மையென்று நீர் தெளிந்தபடி எனக்கு அனுபவந் தோன்றாமையால் சுருதிப்பிரமாணங்களை கேட்டுணர்ந்துங் கொஞ்சம் மயங்குகின்றேன் அந்தமயக்கத்தை வேரறுத்து உள்ள அனுபவம் எனக்கு நன்றாய் விளங்கும்படி அதன் அந்தரங்கத்தை தேவரீர் இன்னமும் கிருபை செய்யவேண்டுமென்றனன்.

## ஆசாரியருத்தரம்.

அப்பா சீஷா உனக்கிருக்கின்ற மயக்கமெல்லாங்கூடி மாளிடான் முதலான சீவர்களாகவும் இரதவாகனம் பூமி ஆடையாபரண முதலான செல்வ சம்பத்துக்களாகவும் அவைகளோடுகூடிப் போகித்தல் போலவும் விவகரித்தல் போலவும் விளங்கிக் கொண்டிருக்கின்றதே, இவைகளைப் பொய்யென்று யெப்படி நம்புகிறதென்கிற மயக்கந்தானே, உனக்கிருக் கின்றது. ஆனால் போகித்தல் விவகரித்தல் இராகத் திவேஷங்கள் இவை களுக்கு காரணமாயிருக்கின்றது. மேல்க்கண்ட ஸ்ரீ புத்திரான் முதலான சீவர்களைப் போலவும் இரதவாகனம் பூமி ஆடையாபரணம் ஆடுமாடு யானை குதிரை பாத்திரபண்டங்கள் அன்னம் கிருதகுள பாயாசம் பால்தயிர் பக்ஷ ணங்கள் கனிவர்க்கங்கள் சந்தனம் பன்னீர் புனுகு ஜவ்வாது புஷ்பமுத லான பொருள்களைப் போலவும் விளங்குகின்ற நானாவிதப் பொருள்களே காரணம். அப்படி காரணமாய் விளங்குகின்ற நானாவிதப் பொருள்களெல்

லாக் கூடிய நேதிர்ச்சயமான நாமரூப ஜெகத்து, அச்சகத்தே காலத்திரை யங்களிலுமில்லையே. அப்படிக் காரணமாயுள்ள ஜெகத்தே காலத்திரையங் களிலுமில்லையானால் அதோடேகூடிப் போகித்தலும் விவகரித்தலும் இராகத் திவேஷங்களாய் நடக்குதலுமாகிய அதன் காரியங்களெல்லாம் எது வெல்லாம் பொய்மையென்று ஆசாரியர் கூறினர்.

### சீடன் சங்கை.

மேல்க்கண்ட பல பொருள்களாயுள்ள நாமரூப ஜெகத்து, வெகு ஆடம்பரத்துடனே பிரத்தியக்ஷமாய் இதோ விளங்கிக் கொண்டிருக்கின் றதே, இதைப் பொய்யென்று எங்ஙனஞ் சொல்லலாமென்றனன்.

### ஆசாரிய ருத்தரம்.

நல்லது ரஜ்ஜு ஸர்ப்பமும் கட்டையிற் புருடனும் கானர்ஜெலமா கிய இவைகள் காலத்திரையங்களிலுமில்லாத சர்வமித்தைகளாயிருந்தும் அவைகள் யெதார்த்தம்போல பிரத்தியக்ஷமாக விளங்கவில்லையா அவை கள் அப்படி பிரத்தியக்ஷமாக விளங்கினதினால் அவைகள் பொய்யையன்றி மெய்யாகுமா ஆகாது. அதுபோலவே ஜெகத்தும் எதார்த்தம்போல பிரத் தியக்ஷமாய் விளங்கிடினும் அதுவும் பொய்யேயன்றி மெய்யாகாதுவென் றனர்.

### சீடன் சங்கை.

ஆனால் ரஜ்ஜு சர்ப்பாதிகள் பொய்யானதினாலல்லவா அதுகளோ கேடி போகித்தலாதி விவகாரங்களை உலகத்தில் யாருஞ்செய்ததில்லை. இச்செகத்தும் அவைகளைப் போலவே பொய்யானால் இதோடவுங்கூடி போகித்தலாதி விவகாரங்களை ஒருவருஞ் செய்யாதிருக்கவேண்டுமே, அப் படிக்கில்லாத ஜெகத்தை ரஜ்ஜு சர்ப்பாதிகளோடொவ்வமையாக்கி எங்ஙனம் பொய்மை கூறப்படுமென்றனன்.

### ஆசாரிய ருத்தரம்.

அந்த ரஜ்ஜு சர்ப்பாதிகளோடே கூடி உலகத்தார் விவகரிக்கிற துண்டே. அது உனக்கு விளங்கும்படி நாம் காட்டுகிறோம் அப்போதாவது இஜ்ஜெகத்தைப் பொய்யென்று நீ நம்பலாமா சொல்லென்றனர்.

சீடன் ஒப்புக்கொள்ளுதல்

ஆம் நம்புகிறேனென்றனன்

## ஆசாரியருத்தரம்

ரஜ்ஜு கட்டை கானல் இவை மூன்றில் ரஜ்ஜு கட்டை இவ்விரண்டையும் உலகத்தார் கண்டு சற்பமெனவுங் கள்ளனெனவும் பிராந்தியினால் நிச்செயமாகத் தீர்மானித்து உடனே அவர்கள் நாவுகுளருதல் கால்கை உடல் நடுங்குதல் வேர்வை காணுதல் அவைகளிருக்குமிடத்துக்கு போகாதொழிதல் பிறரோடு கூறுதல் பிறருக்குக் காட்டுதல் ஜனங்களை கூட்டஞ் சேர்க்குதல் கயருகம்பு தேடுதல் சம்பாலடிக்குதல் தீபமேற்றநெருப்புக்கு ஓடி அலைந்து சிரமப்படுதல் தீபமேற்றுதல் தீபத்தைக் கொண்டுபார்க்குதலாதித்தொழில்கள் அனேகமிருக்கின்றன கானலை சலமென்று நிட்செயித்த உடனே தாகந்தணிக்கும் பொருட்டு அதிருக்குமிடந் தேடி ஓடுதலாதி அனேகவிவகாரங்கள் அக்கானல் ஜெலத்தைப்பற்றியிருக்கின்றது.

ஆதலின் ரஜ்ஜு சாப்பாதி மூன்றுடனுங்கூடி நீமுதலான உலகத்தார் அங்ஙனம்விவகரிக்கும்விவகாரங்களை யெதார்த்தமாக நீங்கள் கருதுவதும் உண்டாஇல்லையா நீகூறுவாயாகவென்றனர்.

## சீடன்ஒப்புக்கொள்ளுதல்

ஆம் அய்யா சுவாமி அந்த ரஜ்ஜு சப்பாதி மூன்றோடுங்கூடி மேற்கண்டவிவகாரங்களை யெதார்த்தமாகவே யெண்ணி நான் முதலானஉலகத்தாரும் விவகரித்து வருகிறோம் அது யெங்களுக்கு அனுபவந்தான் ஆனாலந்த விவகாரங்களை அதுவும் விவகாரந்தானே யென்று யோசிக்காமலே அவைகளோடு கூடி விவரிக்கும் விவகாரங்களில்லையே யென்றேன் இப்போது தேவரீர் விவரமாக அருளிச்செய்ததின்மேல்த்தான் அவைகளோடு கூடி விவகரிக்கும் அவ்விவகாரங்களிருக்கின்றதென்றுணர்ந்தேனென்றனன்.

## ஆசாரியருத்தரம்

அங்ஙனம் சர்வமித்தையாகிய ரஜ்ஜு சர்ப்பாதிகள் தோற்றுவதும் அவைகளோடுகூடிவிவகரிக்கின்றவிவகாரங்களும் யெதார்த்தம்போலயெப்படித் தோற்றுகின்றதோ அதுபோலவே காலத்திரையங்களிலுமில்லாத சர்வமித்தையாகிய அச்சகந்து யெதார்த்தம்போலத்தோற்றுதலும் அதோடுகூடி விவகரிக்கின்ற விவகாரங்களும் யெதார்த்தம் போலத்தோற்றுதலே அன்றி இச்செகத்தும் இச்செகத்தோடு கூடியவிவகாரங்களும் காலத்திரையங்களிலுமில்லவேயில்லை இதுஉண்மையென்றனர்.

## சீடன் பிரார்த்தித்தல்.

இச்சகத்தோடேகூடி விவரித்தல் பேசித்தல் முதலானவைகள் பொய்யென்பதற்கு அத்தியாசன சரித்திரமுதலானதுகளை அன்றியும் சுருதிப்பிரமாணங்களையும் மேலே தேவரீர் அருளிச்செய்தாயிற்று. அவ்விவகாராதிகளுக்குக் காரணமாக இருக்கின்ற பலபொருள்களாய் விளங்கிய நாமரூப ஜெகத்தும் ரஜ்ஜு சர்ப்பாதிகளைப்போல மெய்மையாகவே விளங்குகின்றதென்பதற்கும் சுருதிப் பிரமாணங்களுண்டா, உண்டுமானால் கைகவுத்தரவாக வேண்டுமென்று கேட்டனன்.

## ஆசாரியருத்தரம்.

அதைப்பற்றியே பிரதிபாதிக்கின்றது சுருதி வாக்கியங்களெல்லாம் அதில் சில வாக்கியங்களை உனக்குப் புகலுகிறேன் கேளென்று அவ்வாக்கியங்களை யெடுத்துப் புகன்றனர்.

## கைவல்லிய நவநீதம்.

கானல்நீர் கிளிஞ்சில்வெள்ளி கந்தர்ப்ப நகர்சலூ ர்
வானமை கயிற்றிற்பாம்பு மலடிசேய் முயலின்கோ டு
பீனமாந் தரிபுமானிப் பிரபஞ்சமெல்லாம் பொய் யே
ஞானமெய் மகனேயுன்னை நம்மாணை மறந்திடாதே-அன்றியும்

## ஞானவாசிட்டம்.

பிரமமாஞ் சுத்தவெளி நுலைசளாம் பிறங்கவெல்லா ம்
பரம ஆதித்தன் முன்னர் கானலாம் பரவைஞால ந்
திரமதா மிதனை முன்னே செப்பினன் வியாழன் தந் த
வரமகன் கசனும் பேரோன் மற்றது வுள்ளல்கேட்பாய் அன்றியும்

## ஷை

வெங்காதற் பெரும்பாம்பு வெளிபுற்றுங் கும்பபரம் வெறும்பொய்யென்
றிங்காசையற நீக்கி யெல்லையிலாப் பரமபதத் திருந்துவாழ்வாய் [தே
சிங்காரக் கந்தர்ப்ப நகரிருந்தென் சிதைவுற்றென் நீதோ நன்றே
யங்கான மனைமக்கள் வாழ்ந்தாலென் கெட்டாலென் பாசமாயை

## சீடன் கூறுதல்.

என் பவந்தீர்க்கும் சற்குரு நாயகமே தேவரீர் மகாகருணையுடன் திருவாய்மலர்ந்தருளிய சுருதியுக்தி அனுபவ திருஷ்டாந்த தாஷ்டாந்தங்களை

லால் யதார்த்தம்போல விளங்குகின்ற இச்செகத்துக்கும், இச்செகத்தோகெடு வருதலாதி விவகாரங்களும பொய்மையென்று முக்காலவாசியும் நான் தெளிந்தேன். இன்னமும் இரண்டு சங்கைகளிருந்து என்னை பாதிக்கின்றன அச்சங்கைகளையும் தேவரீர் நிவர்த்தித்தால் குறையும் சரிவரத் தெளிவேனென்பதற்கையமில்லை.

அச்சங்கைகள் யெவையெனில் ரஜ்ஜு சர்ப்பாதிகளைப்போல இச்செகத்துந் தோற்றுமானால் அந்த ரஜ்ஜு சர்ப்பாதிகள் தோற்றுவதற்கு ரஜ்ஜுக்கட்டை கானல் இவைகள் ஆதாரமாக இருக்கின்றதுபோல இச்செகத்துந் தோற்றுவதற்கும் ஒரு ஆதாரமிருக்கவேண்டுமே அந்த ஆதாரமெது? இது ஒரு சங்கை மற்றொரு சங்கையைப் பின்னாலே அறிவிக்கிறேன். அதற்கு ஆதாரமின்னதென்று தேவரீர் அருளிச்செய்யவேண்டுமென்றனன்.

## ஆசாரியாருத்தரம்.

அகண்ட பரிபூரண சச்சிதானந்த பிரமமாகிய உனது ஆத்துமசொரூபமே இச்செகத்தோற்றுவதற்கு ஆதாரமாயுள்ளது. அதைச் சுருக்கமாய் நாம் சொல்லுகிறோம் அஃது எங்ஙனமெனில் ஆத்துமசொரூபத்தினிடத்தில் மனோவிருத்திகள் தோன்றும். அம்மனோவிருத்தியில் பஞ்சவிருத்திகள் தோன்றும். அப்பஞ்சேந்திரிய விருத்திகளில் ஜெகத்துத்தோன்றும். இங்ஙனந் தோன்றி விளங்கிய ஜெகத்து அது ஒடுங்குங்கால் அச்செகத்து பஞ்சேந்திரியவிருத்திகளிலொடுங்கும் அப்பஞ்சேந்திரிய விருத்திகள் மனோவிருத்தியிலொடுங்கும். அம்மனோவிருத்திகள் ஆத்துமசொரூபத்திலொடுங்கும்.

இந்தப்பிரகாரஞ் சகத்துத்தோற்றுதலும் ஒடுங்குதலும் ஆத்துமசொரூபத்திலாதலால் ஜெகத்துத் தோற்றுவதற்காதாரம் நானாகிய ஆத்துமசொரூபமே அன்றி வேறில்லை.

## சீடன் கேள்வி.

அங்ஙனம் ஜெகத்து பஞ்சேந்திரிய விருத்திகளிற்றோன்றி ஒடுங்குதற்கும் அவ்விந்திரிய விருத்திகளும் அதன் காரணங்களினின்றுதோன்றி ஒடுங்குதற்கு அநுபவம் வேண்டுமென்றனன்.

## ஆசாரியருத்தரம்.

மெய்வாய் கண் மூக்கு செவியென்கிற பஞ்சேந்திரியங்களின் விஷயங்களான சப்த பரிச ரூப ரச கந்தமாகிய பொருள்களே ஜெகத்து

அப்பஞ்சவிஷயப் பொருள்களைத்தவிர வேறொரு பொருளுஞ் சகத்தி லில்லை. அங்ஙனஞ் சகத்தாய் விளங்கிய பஞ்சவிஷயப் பொருள்களோடு பஞ்சேந்திரிய விருத்திகள் கூடினால்தான் பஞ்சவிஷயப் பொருள்களாகிய ஜெகத்துந் தோன்றும் அவ்விஷயப்பொருள்களோடு அவ்விந்திரிய விருத்திகள் கூடாவிடின் விஷயப்பொருள்களாகிய ஜெகத்துந் தோன்றாது. இவ்வநுபவத்தை இப்பொழுதே உனக்குள்ளே நன்றாய் யூகித்துப் பார்ப்பாயாக.

அன்றியும் இந்திரிய விருத்திகள் விளங்கிய ஜாக்ராவஸ்தையி லிருந்த ஜெகத்து அவ்விந்திரிய விருத்திகளொடுங்கிய நித்திரையில் அச்செகத்துத் தோன்றினதில்லையே இது உனக்கு நாடோறுமுள்ள அநுபவ மாச்சுதே இதையும் நீ நன்றாய் யூகித்துப்பார் விளங்குமென்றனர்.

## சீடன் ஒப்புக்கொள்ளுதல்.

பஞ்சவிஷயப் பொருள்களே ஜெகத்தெனவும் அவ்விஷயங்க ளோடு இந்திரியவிருத்திகள் கூடினாலே ஜெகத்துந் தோன்றும். அல்லது அது தோன்றாதெனவும் அன்றியும் இந்திரிய விருத்திகள் விளங்கிய ஜாக் கிரா அவஸ்தையிலிருந்த ஜெகத்து அவ்விந்திரிய விருத்திகளொடுங்கிய நித்திரையிலுமில்லையெனவும் தேவரீர் மேலே கட்டளையிட்டருளிய மார்க் கங்களைப்பற்றி அடியேன் பார்த்ததில் அவ்வளவும் யதார்த்தமாகவே இருக்கின்றதென்றனன்.

## ஆசாரியாருத்தரம்.

உனக்குஞ் சரியாயிருக்கிற அவ்வநுபவப்படி ஜெகத்தோடும் இந் திரியவிருத்திகள் கூடினாலே ஜெகத்துமுண்டு அப்படிக்கவைகள் கூடாத இடத்தில் ஜெகத்துமில்லை யென்றதானால் ஜெகத்துக்காதாரமே இந்திரிய விருத்திகளல்லவா? அங்ஙனம் ஜெகத்துக்காதாரமாகிய இந்திரியவிருத்திக ளில்லாதனே ஜெகத்துந் தோன்றாததும் ஒக்குதலுபாம் என்றனர்.

## சீடன் ஒப்புக்கொள்ளுதல்.

சுவாமி யதார்த்தந்தானென்று ஒப்புக்கொண்டனன்.

## ஆசாரியாருத்தரம்.

இந்திரியங்களோடு மனமாதிவிருத்திகளும் கூடினாலே இந்திரி யங்கள் தொழில்பட்டு விளங்கும். அம்மனமாதி அந்தக்கரணங்கள் அப்

படிக் கூடாத இடத்தில் இந்திரியங்கள் தொழில்பட்டு விளங்காது. இவ்வனுபவத்தையும் நீ உனக்குள்ளே நன்றாய் ஊன்றி யூகித்துப்பார் விளங்குமென்றனர்

## சீடன் ஒப்புக்கொள்ளுதல்.

சுவாமி நீர் கூறியவாறே யெனக்குள்ளே அதுகளின் தொழில்களை நான் ஊன்றி யூகித்துப்பார்த்ததில் தேவரீர் அருளியபடியே இந்திரியங்களோடு மனமாதிவிருத்திகள் கூடினால்த்தான் இந்திரியங்கள் தொழில்பட்டு விளங்குகின்றது அல்லது இல்லைதான் என்றனன்.

## ஆசாரியாருத்தரம்.

அவ்வனுபவப்படி இந்திரியங்களோடு மனமாதிவிருத்திகள் கூடினால்த்தான் இந்திரியங்களுக்கு தொழிலும் விளக்கமும் உண்டு அல்லது இல்லையென்றதானால் இந்திரியவிருத்திகளுக்கு ஆதாரமே மனமாதிவிருத்திகளல்லவா அப்படிக்காதாரமாகிய மனமாதிவிருத்திகளில்தானே இந்திரிவிருத்திகள் தோன்றி ஒடுங்குமென்றனர்.

## சீடன் ஒப்புக்கொல்.

சுவாமி யெதார்த்தந்தானென்று ஒப்புக்கொண்டனன்.

## ஆசாரியாருத்தரம்.

இந்தப்பிரகாரம் இந்திரியவிருத்திகள் தோன்றி ஒடுங்குதற்காதாரமாகிய மனமாதிவிருத்திகளோடு அபிமானியாகிய சிதாபாசன் கூடி அபிமானித்ததாலே அம்மனமாதிவிருத்திகளும் விளங்கும். அப்படிச்சந்த சிதாபாசன மனமாதிவிருத்திகளோடுகூடி அவ்விருத்திகளை அபிமானிக்காத இடத்தில் அம்மனமாதிவிருத்திகளுமில்லை இவ்வனுபவத்தையும் நன்றாய் ஆராய்ந்து பார் விளங்கும். இதற்கு ருசுவான அனுபவம் அநேகமாயிருக்கின்றதில் ஒன்றை இப்போது நிரூபிக்கிறோம்.

அதாவது சிதாபாசன் மனமாதிவிருத்திகளோடு கூடி விளங்கிய ஜாக்கிர சொற்பனத்திலிருந்த மனமாதிவிருத்திகள் சுழுத்தியில் அவ்விருத்திகளோடு கூடாமல் சிதாபாசன் தனிமையாக விளங்கியபோது அம்மனமாதிவிருத்திகளுமில்லை இதுவும் உனக்கு நாடோறுமுள்ள அனுபவந்தான் இதையும் நீ யோசித்துப்பார் யென்றனர்.

### சீடன் ஒப்புக்கொள்ளுதல்.

சுவாமி நீர் கூறியவாறே அடியேன் அவைகளை நன்றாய் யோசித்துப் பார்த்ததில் தேவரீர் கூறியபடி மனமாதிவிருத்திகளோடு சிதாபாசனுங் கூடி அபிமானித்ததாலே அம்மனமாதிவிருத்திகள் விளங்குகின்றது அல்லது இல்லைத்தான் அன்றியும் மனமாதிவிருத்திகளோடு சிதாபாசனுங் கூடி அபிமானித்து விளங்கிய ஜாக்கிர சொப்பனத்திலிருந்த மனமாதி விருத்திகள் அவ்விருத்திகளோடு கூடி அபிமானிக்காமல் சிதாபாசன் சுழுத்தியில் தனிமையாக விளங்கியபோது அவ்விருத்திகளுமில்லைத்தான் யென்றனன்.

### ஆசாரியாருத்தரம்.

அவ்வனுபவப்படி அம்மனமாதிவிருத்திகளோடு சிதாபாசனுங் கூடி அபிமானித்தால்தான் அவ்விருத்திகளுமுண்டு அல்லது இல்லை யென்றதானால் அவ்விருத்திகளுக்கு ஆதாரமே சிதாபாசனல்லவா? அங்ஙனம் ஆதாரமாகிய சிதாபாசவிருத்தியில்த்தானே அம்மனமாதிவிருத்திகள் தோன்றி ஒடுங்கு மென்றனர்.

### சீடன் ஒப்புக்கொள்ளுதல்.

சுவாமி யெதார்த்தந்தானென்று ஒப்புக்கொண்டனன்.

### ஆசாரியாருத்தரம்.

அங்ஙனம் மனமாதிவிருத்திகடோன்றி ஒடுங்குதற்கு ஆதாரமாகிய சிதாபாசவிருத்தியோடு அவித்தையுங்கூடினதினாலே தானல்லாத சரீரத்தை தானெனவும் யெவ்வளவும் நிசமில்லாத ஜெகத்தை நித்தியமெனவும் துக்க மயமான போகங்களை இன்பமெனவும் மாறாகக்கருதி அவைகளோடுகூடி விவகரித்தும் அதனால் பந்தப்படுகிறதுமான சிதாபாசவிருத்திகள் விளங் கும். அவ்வாறு சிதாபாசனுக்கு அவித்தையா சம்மந்தம் இன்றாயின் மேல் விவரமாய் சொல்லப்பட்டிருக்கிற சிதாபாசவிருத்திகளுமில்லவே இல்லை. இதற்கும் ருசு யெங்ஙனமெனில் அவித்தையாசம்மந்தனாகி சிதா பாசன் விவகரித்த அஞ்ஞானதிசையிலிருந்த மேற்கண்ட சில விவசாரங் களை அவித்தையாசம்மந்தங் கெட்டு சிதாபாசன் யேகமான பிரமமே தானாகி விளங்கிய சீவன்முத்திதிசையில் மேற்கண்ட சிலவிவகாரங்களு மில்லை. இதுவே அதற்குப் போதுமான ருசு இதையும் நீ யோசித்துப்பார் விளங்குமென்றனர்.

## சீடன் ஒப்புக்கொள்ளுதல்.

ஆமய்யா ஆசாரியரே தேவரீர் கூறியபடி அவைகளின் தன்மை களையெல்லாம் அடியேனும் யோசித்துப்பார்த்ததில் சிதாபாசன் அவித்தை யோடு சமமந்தப்பட்டால்த்தான் மேற்கண்ட ஜீவ விவகாரங்களும் விளங் கும். அப்படி சிதாபாசன் அவித்தையோடு சம்மந்தப்படாத இடத்தில் அச்சிவ விவகாரங்களும் விளங்காதுதான். அதற்குக் கொடுத்த ருசுவும் யெதார்த்தந்தானென்றனன்.

## ஆசாரியாருத்தரம்.

அங்ஙனம் சிதாபாசனோடு அவித்தையுஞ் சம்மந்தப்பட்டால்த்தான் சிதாபாசவிருத்தியாகிய சிவவிவகாரங்களுமுண்டு அல்லது இல்லையென்ற தானால் சிதாபாசவிருத்தியாகிய சிவவிவகாரங்களுக்கு ஆதாரமே அவித் தையல்லவா அப்படிக்காதாரமாகிய அவித்தையிற்றானே சிதாபாசவிருத்தி யுந்தோன்றி ஒடுங்குமென்றனர்.

## சீடன் ஒப்புக்கொள்ளுதல்.

ஆம் யெதார்த்தந்தானென்று ஒப்புக்கொண்டனன்.

## ஆசாரியாருத்தரம்.

அங்ஙனம் சிதாபாசவிருத்தி தோன்றி ஒடுங்குதற்காதாரமாகிய அவித்தையென்னும் பிரகிருதியும் சூரியனது சன்னதியில் சிப்பி யெதார்த் தமான வெள்ளிபோல தோன்றிய பொய்மை யெப்படியோ அதுபோ லவே நீயாகிய ஆத்ம சொரூபமான பிரமத்தினது சன்னதியிலும் அவித் தையென்னும் பிரகிருதியானது யெதார்த்தம்போல அப்படியே பொய்மை யாக விளங்கப்பட்டது. இப்பிரகிருதிக்கு பின்னுசத்தியென்று பெயராம்.

சுத்திகாரசிதம் விளங்குதற்கு ஆதாரம் சூரியனனதுபோல இப்பிர கிருதியான பின்னுசத்தி விளங்குதற்கும் ஆதாரம் நீயாகிய ஆத்மசொருப மான பிரமமேயென்று வேதாதிசாஸ்திரங்களெல்லாம் முறையிடுகின்றன பாரென்று அவ்வாக்கியங்களை யெடுத்துப் புகலுகின்றனர்.

## கைவல்லிய நவநீதம்.

சுத்தியில் வெள்ளிபோலத் தோன்றிய தோற்றமா ளே
சத்தியும் பொய்யெயென்றுஞ் சத்திசாதனமா வந் தி
முத்தியும் பொய்யாமென்னின் யோசித்திரா விலங் யா
சித்திரை தெளியுமாபோ ளிருவாண நிலைமெய்யா மே

சீடன் ஒப்புக்கொள்ளுதல்.

சுவாமி தேவரீர் அருளிச்செய்த வேதவாக்கியங்களை அடியேன் கேட்டுணர்ந்ததில் நீர் கூறியபடியே அவித்தையென்னும் பிரகிருதியாகிய பின்னுசக்தி விளங்குதற்காதாரம் பிரமமென்றுதான் அவ்வாக்கியங்கள் கூறுகின்றன அதற்குச் சந்தேகமில்லையென்றனன்.

ஆசாரியாருத்திரம்.

அங்ஙனம் சுருதியாதிகள் கூறுகின்றபடியே அவித்தையென்னும் பிரகிருதியாகிய பின்னுசத்தி விளங்குதற்காதாரம் பிரமமென்ருயானுல் அப்படிக்காதாரமான நீயாகிய ஆத்மசொரூபமான பிரமத்திற்றுனே அவித்தையென்னும் பிரகிருதியுந் தோன்றி ஒடுங்கும். இதை அனுபவரூபமாய் அறிய இப்போது உன்னால் சத்தியின்மையால் திருவஷ்டாக்த ரூபமாயும் வாக்கியரூபமாயும் உணர்த்தினேமென்றார்.

சீடன் ஒப்புக்கொள்ளுதல்.

சுவாமி யெதார்த்தந்தானென்று ஒப்புக்கொண்டனன்.

ஆசாரியாருத்தரம்.

அப்பா சிஷ்யா இந்தப்பிரகாரம் கடல்நீரிலிருந்து அலையும் அவ்வலையிலிருந்து சிதரிய திவலையும் அத்திவலையிலிருந்து நுரைகளும் அந்நுரைகளிலிருந்து குமிழிகளுமாகிய இவைகள் ஒன்றிலிருந்தொன்று யெப்படி உண்டாகி இருக்கின்றதோ அதுபோலவே நீயாகிய ஆத்மசொரூபமான பிரமத்தினிடத்திலிருந்து அவித்தையென்னும் பிரகிருதியாகிய பின்னு சத்தியும் அவ்வவித்தையிலிருந்து சிதாபாச விருத்தியும் அச்சிதாபாசவிருத்தியிலிருந்துமனமாதிவிருத்திகளும் அம்மனமாதிவிருத்திகளிலிருந்து பஞ்சேந்திரிய விருத்திகளும் அப்பஞ்சேந்திரிய விருத்திகளிலிருந்து ஜெகத்து விருத்திகளுமாகிய யிவைகளும் ஒன்றிலிருந்து ஒன்று உண்டாகியிருக்கின்றன.

அக்கடல் நீரிலிருந்துதித்த அலைமுதல் குமிளிவரையிலுமுள்ளவைகளவைகள் ஒன்றிலிருந்தொன்று காரணகாரியங்களாக உண்டாயிருக்கினும் அவைகள் யாவும் அக்கடல்ஜெலத்திலேயே விளங்குவதுபோல உனது ஆத்மசொரூபமான பிரமத்தினிடத்திலிருந்து உதித்த பின்னுசத்தியாகிய அவித்தைமுதல் ஜெகத்துவரையிலுமுள்ளவைகளும் ஒன்றிலிருந்தொன்று காரணகாரியங்களாக உண்டாயிருக்கினும் அவைகளியாவும் நீயாகிய ஆத்துமசொரூபமான பிரமத்திலேயே விளங்கும். இவைகளின் தன்மைகளை விபரமாய் யெனக்குத்தராவாகவேண்டுமென்று நீ அறிவித்த

தின் பொருட்டு அவைகளை இவ்வாறு, வகை விவரமாய் உனக்கு நாம் உணர்த்தினோம் ஆதலின் அவைகளை நீ மனதில் தெளிவுபட நன்றாய் மனனம் பண்ணுவாயாக வென்றனர்.

சீடன் ஒப்புக்கொள்ளுதல்.

சுவாமி தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய விவரங்களையெல்லாம் அடியேன் கேட்டுணர்ந்ததில் ஜெகத்தாதி யாவும் நாமாகிய ஆத்மசொரூபத்தினிடத்திலேயே விளங்குகிறதாய்த்தான் தோன்றுகின்றது. ஆனால் யெனது சரீரத்துக்குள்மட்டுந்தானே நான் விளங்குகின்றேன் அப்படி நான் விளங்குகின்ற சரீரத்துக்குள் ஜெகத்துத் தோன்றாமல் சரீரத்துக்குப் புறம்பில் நான் விளங்காத யெவ்விடத்திலும் அச்செகத்து விளங்குகின்றதுபோல தோன்றுகின்றதே இச்செகத்துமட்டும் யென்னையன்றி விளங்குவதுபோல அப்படித் தோற்றுவானேன் யென்றனன்.

ஆசாரியாருத்திரம்.

நீ பூரணன் யென்பதாய் மேலே உனக்கு நாம் உணர்த்தியிருக்கிறோம். அதை நீ கேட்டிருந்தும் சரீரத்துக்குள்மட்டுந்தானே நான் விளங்குகின்றேன் சரீரத்துக்குப் புறம்பில் நான் விளங்கவில்லையே யென்று இப்பொழுது நீ கூறியதை யோசிக்கும்பொழுது பூரணமென்கிற பதத்துக்கு அருத்தமே உனக்கு யெவ்வளவுந் தோன்றவில்லைப்போல நமக்கு அபிப்பிராயப்படுகின்றது. ஆகிலும் பூரணமென்கிற பதத்தின் சப்தார்த்தத்தை இப்போதும் உனக்கு நன்றாய் உணர்த்துகிறோம் அதைக்கேட்டு நீ மனனம்பண்ணிக்கொள்ளுதி.

ஆகாயத்தைப்போல யெங்கும் சர்வவியாபகமாக கண்ட மற்று அகண்டமாய் யெவ்விடங்களிலும் நிறைந்திருப்பது பூரணம் ஆகலின் சுவற்கமத்திய பாதாளமுதலான சர்வ உலகங்களிலும் பின்னுமுள்ள யாவத்திலும் கண்ட மற்று அகண்டமாய் சர்வ வியாபகமாக நீ நிறைந்திருக்கிறவனேயன்றி உனது ஒரு சரீரமட்டிலும் நீ விளங்குகிறவன் அன்று.

அதுநிமித்தமே சரீரசம்பந்தப்பட்டு நான் நானென்று விவகரிக்கும் அறிவாகிய கூடஸ்தனை கெடாகாயமெனவும் அகண்ட பரிபூரண சச்சிதானந்த சுயம் சைதன்னியமான பிரமத்தை மகாகாயமெனவும் கெடாகாயம் மகாகாயம் இவை இரண்டையும் வெவ்வேறாகவுணரும் அறிவீனர்களைப்போலவே ஆத்மவிசாரமின்றிய மூடர்களும் கூடஸ்தனையும் அகிலண்டாணமான பிரமத்தையும் வெவ்வேறாக உணர்வார்களெனவும்.

கெடோபாதியினால் அக்கெடத்துக்குள் விளங்கிய வெளியான ஆகாயம் மகாகாயத்தை அன்றி வேறுபோல பிராந்தியாகத் தோன்றின

போதிலும் கெடாகாயமே மகாகாயம் மகாகாயமே கெடாகாயம் இவ்விரண்டும் யெப்படி ஒன்றோ அதுபோலவே சரீரோபாதியினால் அசரீரத்துக்குள்ளீடாய் விளங்கிய அறிவாகிய கூடஸ்தன் பரிபூரண பிரமத்தை அன்றி வேறுபோல பிராந்தியாய்த் தோன்றினபோதிலும் கூடஸ்தனே பிரமம். பிரமமே கூடஸ்தன் இரண்டும் ஒன்றேயன்றி வேறின்றெனவும் சகல உபநிஷத்துக்களும் பிரதிபாதிக்கின்றன அப்படிப் பிரதிபாதிக்கின்ற உபநிஷத்துக்களனைத்தையும் பார் விளங்கும்.

ஆகலின் உனது சரீரத்துக்குள்ளும் மற்றும் சீவபேதங்களாயுள்ள சகல சரீரங்களுக்குள்ளும் சரீரங்களுக்குப் புறம்பாயுள்ள யெவ்விடங்களிலும் சர்வவியாபகமாக நீ விளங்குகிறபடியால் ஜெகத்து சரீரத்துக்கு புறம்பான யெந்த இடத்தில் விளங்கினாலுஞ் சரியே அச்செகத்து உன்னிடத்திலேயேதான் விளங்குகின்றது வேறில்லை இதை உணர்வாயாகயென்றனர்.

சீடன் சங்கை.

சுவாமி நீர் கூறிய யுக்திமுதலானவைகளால் யெனது சரீரத்தை அன்றியிலும் மற்றும் சமஸ்தமான பேத சரீரங்களிலும் அச்சரீரங்களுக்குப் புறம்பாயுள்ள சகல உலகங்களிலும் ஆகாயத்தைப்போல சர்வவியாபகமாய் நான் நிறைந்து விளங்குகிறேனெனவும் அப்படி விளங்குகின்ற யென்னிடத்திலேயே சர்வ ஜெகத்தும் படர்ந்து விளங்குகின்றதே அன்றி வேறில்லையெனவும், சந்தேகமற நான்தெளிந்தேன். ஆனால் நான் மேலே அறிவித்திருக்கிறபடி இன்னமொரு சங்கை இருக்கின்றது அதை இப்போதறிவிக்கிறேன்.

அதென்னவெனில் ரஜ்ஜு சற்பம் கட்டையிற் புருடன் கானல் ஜெலம் இவைகளைப்போல இச்செகத்தும் சுத்தப் பொய்யாகத் தோற்றப்படுகின்றதெனவும் அந்த ரஜ்ஜு சர்ப்பாதிகள் தோற்றுகின்றதை யெதார்தமென்று நிச்சயித்தவர்கள் அவைகளோடுகூடி விவகரிக்கிறதுபோலவும் அத்தியாசன் யென்பவன் வாழ்ந்து விவகரித்ததை மேலே விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறதுபோலவுமே நீயும் அப்படித் தோற்றப்பட்ட ஜெகத்தோடு கூடிவாழ்ந்து விவகரிக்கிறதுமாகுமென்று மேலே தேவரீர் அடியேனுக்கு அனுக்கிரகஞ் செய்யப்பட்டிருக்கின்றது.

ஆனால் உலகத்தார்தங்களுடைய புத்திப்பிரமணத்தினால்வந்த அஞ்ஞானத்தினால் அல்லவா அவர்கள் சுத்தப்பொய்யாகத் தோற்றிய ரஜ்ஜு சர்ப்பாதிகளை யெதார்த்தமென்று கருதினதும் அவைகளோடு கூடி விவகரித்ததும் அதுபோல காலத்திரையங்களிலுமில்லாத ஜெகத்துத் தோன்றி

யதை யெதார்த்தமென்று நான் கருதினதும் அதோடுகூடி நான் வாழ்ந்து விவகரிக்கிறதும் யென் புத்திப்பிரமணத்தினால் வந்த அஞ்ஞானமல்லவா யெனக்கும் நான் பிரமமானால் இப்படிப்பட்ட மயக்கமான அஞ்ஞானத்தில் நான் கட்டுப்படுவானேன் இச்சங்கையைத் தேவரீர் நிவர்த்திக்கவேண்டுமென்றனன்.

### ஆசாரியாருத்தரம்.

ரஜ்ஜு சர்ப்பாதிகளைப்போல சுத்தப்பொய்மையாக விளங்குகின்ற ஜெகத்தை யெதார்த்தமென்று கருதுகிறதும் அதோடுகூடி விவகரிக்கிறதுமாகிய அஞ்ஞான மயக்கம் சிதாபாசனுக்கேயன்றி பிரமத்துக்கு ஒன்றுமில்லையே யென்றனர்.

### சீடன் சங்கை.

ஆனால் சிதாபாசன் பிரமத்துக்கு அன்னியன்தானோ யென்றனன்.

### ஆசாரியாருத்தரம்.

அப்படிக்கில்லை சிதாபாசனும் பிரமமும் ஒன்றேதான்யென்றனர்

### சீடன் சங்கை.

ஆனால் யெதார்த்தமாகிய பிரமம் சுத்த அபத்தமாகிய சிதாபாசனாகவும் யெங்ஙனம் விளங்கும்? அங்ஙனம் விளங்குமாகில் சிதாபசானுக்குள்ள அஞ்ஞானம் அனித்தியாதி சகல குணங்களும் அப்பிரமத்துக்கும் உண்டல்லவா யென்றனன்.

### ஆசாரியாருத்தரம்.

மெய்யாகிய ரஜ்ஜு பொய்யாகிய சர்ப்பமாகவும், மெய்யாகிய கட்டை பொய்யாகிய புருடனாகவும், மெய்யாகிய கானல் பொய்யாகிய ஜெலமாகவும் விளங்கவில்லையா அப்படி மெய்யானவைகள் பொய்யான பொருளாக விளங்கினதினால் பொய்யாயுள்ள சர்ப்பமுதல் மூன்றுக்குமுள்ள பொய்மயமான குணங்கள் மெய்யாயுள்ள ரஜ்ஜு கட்டை கானல் இவைகளுக்கும் உண்டாகி இவைகளும் பொய்யாயிற்றா? இல்லையே அது போலவே பிரமம் பொய்யான சிதாபாசனாக விளங்கினபோதிலும் அச்சிதாபாசனுக்குள்ள அஞ்ஞானம் அனித்தியாதி குணங்களும் அப்பிரமத்துக்குச் சற்றுஞ் சேராதென்பதே சகல உபநிஷத்தாதிகளுடைய சித்தாந்தமும் என்றனர்.

### சீடன் சங்கை.

நித்தியமாகிய பிரமத்துக்கு அனித்தியமாகிய ரஜ்ஜு சர்ப்பாதிகளை திருஷ்டாந்தங் கொடுத்தீரே அது நியாயமா யென்றனன்.

### ஆசாரியாருத்தரம்.

அப்பா சிஷா அப்படிப்பட்ட திருஷ்டாந்தத்தை நான்மட்டும் உனக்குக் கூறவில்லையே இருக்காதிவேத உபநிஷத்துக்கள் சர்வ சாஸ்திரங்களெல்லாம் அந்த ரஜ்ஜு முதலான அநித்திய ஜெகத்தையே திருஷ்டாந்தங்கொடுத்து நித்தியப்பொருளை அறிவிக்கின்றனவன்றி அநித்தியப் பொருளைத் திருஷ்டாந்தங்கூறி அதுமூலமாகவே நித்தியப்பொருளை அறிவிக்கவேண்டுமெனவும் நித்தியத்துக்கு அநித்தியத்தை திருஷ்டாந்தங்கூறலாகாதென்று யார் சங்கிக்கிறார்களோ அவர்களை சுத்தமூடர்களெனவும் முறையிடுகின்றதே அச்சுருதியாதிகளை நீ பார்ப்பாயாக வென்றனர்.

### சீடன் ஒப்புக்கொள்ளுதலும் வினவுதலும்.

உபநிஷத்துக்களனைத்தும் நித்தியத்துக்கு அநித்தியங்களையே திருஷ்டாந்தங் கொடுத்திருக்கின்றது யெதார்த்தந்தான். அது நிற்க நித்தியத்துக்கு அனித்தியத்தையே திருஷ்டாந்தங் கொடுக்கவேண்டுமெனவும் அத்திருஷ்டாந்தங் கூடாதென்று சங்கிப்பவர்கள் மூடர்களெனவும் கூறியிருக்கிற வாக்கியம் இன்னதென்றுமட்டும் அடியேனுக்குத் தேவரீர் கிருபைசெய்யவேண்டுமென்றனன்.

### ஆசாரியாருத்தரம்.

நல்லது அவ்வாக்கியத்தைக் கூறுகிறோம் கேளென்று அவ்வாக்கியத்தை யெடுத்துக் கூறுகின்றார்.

### ஞானவாசிட்டம்.

ஊகமுளதேற் சிறுவருரையுங்கொள்க வொழிந்த தயனுரைசெயனுந்திரணமொப்ப—வேகவிடுவாய் ஞானமெளிதுதோன்ற வியம்புமுவமானமெலாம் மேகதேச—மாகநினைவாயுருவ மற்ற ஞானமாகாரமாமுவமைக் கண்டாதென்னு—மூகரனுபவமில்லா விகற்பத்தாலே மொழிகுதர்க்க மறிவழிக்குமுயலவேண்டாம்.

### சீடன் சங்கை.

பிரம்மம் மித்தையான சிதாபாசனுகை விளங்கவேண்டியதற்கு காரணம் யென்னயென்றனன்.

### ஆசாரிய ருத்தரம்.

அங்ஙனம் பிரமம் சிதாபாசனுக விளங்கவேண்டியதற்கு காரணங்களொன்றுமில்லை. அப்படி விளங்குவது அப்பிரமத்தினது லீலையே அன்றி வேறில்லையென்றனர்.

## சீடன் வினா

தேவரீர் மேற்கூறியபடி பிரமமே சிதாபாசனாக விளங்குகின்றது யென்பதற்கும் அப்படி விளங்குவது அப்பிரமத்தினது லீலையென்பதுக்கும் சுருதிப்பிரமாணங்களுண்டா வென்றனன்.

## ஆசாரியாருத்தரம்.

அம் சுருதிப்பிரமாணங்களிருக்கின்றன அதைக் கூறுகிறோம் கேளென்று அவ்வாக்கியத்தைக் கூறுகின்றார்.

## ஞானவாசிட்டம்.

சத்தியம் பிரமம்மான்மா பரமதாற் சாற்றவேண் டி
மித்திரப் பெயர்மேலோரா லிடப்பெற்ற விந்தவான் மா
சித்திய மாகத்தானே வேறுபோற் றிகழ்ந்துதீ து
மெத்திமேல் வருசீவப்பேர் மேவிய போலவாகு ம்

## அன்றியும் ஷை.

சீவனென்கின்ற சொல்லும் பொருளுமாய்ச் செறிந்தவான்மா
பாவனை மனனத்தாலே பருத்தெழு மனமதா கு
மேவரும் பிரமந்தன்னில் வேலையில லைபோல்வந் து
தாவுரும் உள்ளந்தானே நினைந்தவா சகங்கற்பிக்கு ம்

## அன்றியும் ஷை.

இன்ன சுபாவந்தானே யொளியா நிற்கும்இருளாகு மொன்றாகு மீறில் கூறாந், தன்னுடைய தொழிலாலே தானே பூர்ணதத்துவம், விட்டிவன வனுனென்னுந் தன்மை, யுன்னிய பாவனையாலே மெள்ளச்சீவ னுருவாகி கும்பியெனு மூகத்தாலே, பன்னியநாநாத்துவத்தில் லழுந்திப்பாவா பாவம் பற்றுதல் விடலாம் பதத்தினிற்கும்.

பின்னும் வருவனவைகளாலுணர்க.
சீடன் ஆசாரியரைத் துதித்தலும்
விசாரிணையிலுதித்த தனது பரோ
க்ஷானுபவத்தைக் கூறுதலும் மேல்
நெறிவினவுதலும்.

வேதங்கள் யாவும் ஓர் வடிவமாய் விளங்கிய வேதநாயகமே அடியார்க்கருள்புரியும் அருள்ஆனந்தக்கடலே யெள்ளுக்குள் யெண்ணைபோல் யெங்கும்நிறை பூரணமே தன்னுக்குள் தானாய் தனித்திருந்த தற்பரமே சென்மங்கடோறும் யெனதுள்ளேநின் றென்னையாண்ட யென்னிறைவனே

ஞானநாயகமே [illegible]வர்பவந்துவேத்து யென்னையாட்கொள்ள வெளிவந்த திருக்கோலமே யேகநாயகனே சென்மங்கடோறும் நான்செய்த தவப்பொருளே யென் தவப்பயனே.

என்னப்பனே யென்னய்யனே யென் சற்குருநாயகனே சரணம் சரணம் சுவாமி. பஞ்சபூத பவுதீகமான தேகேந்திரிய கருவிகரணங்கள் நிறைந்த அடியேனது சரீரமே நானெனவும் பிரமம் கோவிலிலிருக்குமெனவும் மாதாபிதா ஸ்ரீ புத்திரான் முதலான உயிர்ச்சார்புகளும் கிரகனம பூமி ஆடையாபரணம் மற்றும் போகாதிகளுமாகிய பொருட்சார்புகளுடகூடிய ஜெகத்து நித்தியமெனவும் அவைகளோடுகூடிப்போகித்தும் விவகரித்தும் வாழுதலே புருஷப்பிரயோஜனமெனவும் நான் கருதி அநாதிமுதல் இதுகாறும் அவைகளோடு நான் கூடிக்கூடியே சூரியனது கிரணத்தில் அகப்பட்ட கிருமியைப்போல யெனதுள்ளம் வெள்ளரிப்பழம்போலப்புண்ணாகி நொந்து மகா வெப்பமுற்று துக்கமயமாயிருந்த எனக்கு தேவரீர் இரக்கமுற்று பூரண கிருபாகடாக்ஷத்துடனே திருவாய்மலர்ந்தருளிய அனேக சுருதிப்பிரமாணங்களாலும் விதம்விதமாயுள்ள அனேக புத்திகளாலும் அனேகப்பிரத்தியக்ஷ அனுபவங்களாலும் அனேகதிருஷ்டாந்த தாஷ்டாந்தங்களாலும் அனேக உபயதாந்திரியங்களாலும் யெனது சந்தேக விபரீதங்களாயுள்ள யாவுங்கெட்டு தேகம் நாமல்லவெனவும் அத்தேகாந்திரிய கருவிகரணங்கள் முதலான சகல தத்துவங்களுக்கும் அப்பால்பட்டிருக்கின்ற அறிவெனவும் ஆத்மாவெனவும் விளங்குகின்ற பிரமமே நானெனவும் நமதுசரீரமுதல் யெண்பத்துநான்குலட்சம் பேதமாயுள்ள சகலசீவர்களுடைய சரீரங்களினுள்ளும் அச்சரீரங்களுக்குப் புறம்பாயுள்ள சகல உலகங்கள்முதலான யாவத்திலும் சர்வவியாபகமாக நானே நிறைந்திருக்கிறேனெனவும் அப்படி விளங்குகிற யென்னைத்தவிர பிரம்மானது வேறில்லையெனவும் நம்மிடத்திருந்தே பிரகிருதியான அவித்தைமுதல் ஜெகத்துவரையுமுள்ள யாவும் ரஜ்ஜு சர்ப்பாதிகளைப்போல சத்தப்பொய்மையாக விளங்குகின்றதெனவும் அப்படிப்பொய்மையாக விளங்குகின்ற ஜெகத்தோடுகூடிப் போகிக்கிறது விவரிக்கிறது வாழுகிறது முதலான யாவும் ரஜ்ஜுசர்ப்பாதிகளோடுகூடி விவகரிக்கிறவர்களைப்போலவும் அத்தியாசனென்பவன் போகித்து விவகரித்து வாழ்ந்ததுபோலவுமே அன்றியெவ்வளவும் யெதார்த்தமின்றெனவும் சுசடற விசாரித்துப் பூருவும் விசாரித்து நான் தெளிந்துணர்ந்தேன். இப்படி உணர்ந்த யெனது நிட்சயஞானமானது யெவ்வித யேதுக்களாலும் ஒருகணமேனும் மாறாதென்பேத துணிவு.

ஆகலின் முன்பு தேகாதிப் பிரபஞ்சமயமாயிருந்தவென்னை அஞ்ஞானம் வெகுசுளுவில் சன்னஞ்சன்னமாய் அவைகளில்நின்று பிரித்துவிட்ட தேவரீரது மகிமைப்பிரதாபங்களை ஆதிசேடன் ஆயிரநாவினாலும் துதித்து முடியாதென்றால் நானோ துதிக்கவல்லவன் யென்ற சீடன் துதித்துப் பின்னுங் கூறுகின்றான்.

சரீரம் நாமல்லவெனவும் பிரமமே நாமெனவும் ஜெகத்துப் பொய்யெனவும் யெப்படிக் கசடற நான் தெளிர்துணர்ந்திருந்தபோதிலும் சரீரம் நாமென்கிறதும் ஜெகத்து நித்தியமென்கிறதும் போகாதிகளே இன்பமென்கிறதுமாகிய சிதாபாச வாசனைகள் சிலசில காலங்களில் உதித்தும் நாமே பிரமமென்கிறதும் ஜெகத்து அநித்தியமென்கிறதும் போகாதிகள் துன்பமென்கிறது மாகிய சுத்தவாசனை திடமாயுதிக்காமலுமிருக்கின்றது. ஆகலின் சிதாபாசவாசனைகள்கெடுவதற்கும் பிரமவாசனை திடப்படுவதற்குமான மார்க்கத்தை இன்னமுந் தேவரீர் அடியேனுக்கு உபதேசிக்கவேண்டுமென்று சீடன் பணிந்தனன்.

உ

கணபதிதுணை.

## இரண்டாவது

## ஆத்துமவிசாரத் தெளிதற்பிரகரணம்.

### ஆசாரியாருத்தரம்.

அப்பா யெனது அறிவுள்ள புத்திரா நீ யிதுவரை விசாரித்துணர்ந்ததெல்லாங்கூடி விசாரரூபமான பரோச்சமாகிய வாசாக்கியானமேயன்றி தெளிதல்ரூபமான அபோரச்சமாகிய அனுபவக்கியானமல்லவே அவ்வனுபவக்கியானம் உனக்கு உதிக்கிறகாலம்வரையும் விசாரரூபமான பரோக்ஷக்கியானத்தில் நித்தியமின்னது அநித்தியமின்னதென்றுணர்வதுமாத்திரமே அன்றி நாமே பிரமமென்கிற பிரமவாசனையுந் திடப்படாது. சிதாபாசவாசனைகளுங் கெடமாட்டாது. அனுபவக்கியானம் உதித்தாலே பிரமவாசனையுந் திடப்பட்டு சாக்ஷாத்காராநுபவமும் விளங்கும். அப்போதுதான் சிதாபாச வாசனைகளும் அடியோடே கெடும்.

### சீடன் வினா.

சுவாமி அவ்வனுபவக்கியானந்தான் அடியேனுக்கு வருமாறெங்ஙனம்? அதைக் கிருபைசெய்யவேண்டுமென்றனன்.

## ஆசாரியாருத்தரம்.

அப்பா சிஷ்யா ஒரு திருஷ்டாந்த மூலமாய் வெகு சுளுவில் அவ்வனுபவஸ்தானத்தை உனக்கு உணர்த்துகிறோம். அத்திருஷ்டாந்தத்தை நன்றாய்க் கேட்டு நீ உணர்வாயாக. அத்திருஷ்டாந்தமாவது காதியென்று நாமத்தையுடைய ஒரு பிராமணன் விநோதமாய் நீசவேடம்பூண்டனன் அந்நீசவேடத்துடனே அவன் சிலகாலமிருந்துவிட்டதினால் அன்னீசவாசனையே சேடித்துத் தான் பிராமணனென்பதை மறந்து நீசனாக்குமென்று தன்னைக்கருதி நீசவிவகாரங்களாயுள்ளவைகளை அநேககாலம் அவன் செய்துகொண்டிருந்தனன்.

அப்படிக்கிருக்கிற காலத்தில் அவனைத் தெரிந்த காசியென்றொரு பிராமணன் அவனைக்கண்டு அய்யோ மறதியினால் பிராமணன் இப்படி நீசத்தன்மையை அடைந்தும் நீசத்தொழிலைச் செய்தும் கெட்டுப்போனானேயென்று இரக்கமுற்று அவனது யெதார்த்தமாகிய பிராமணவடிவத்தை அவனுக்குக் காட்டுவித்து நீசத்தன்மையைப் போக்கி அவனை சுகத்திலிருத்தவேண்டுமென்று யோசித்து அவனைப்பார்த்து நீ நீசனல்ல பிராமணனென்று காசியென்கிற பிராமணன் கூற அதைக்கேட்டுக்கொண்டிருந்த காதியென்கிறவன் நீசனாகிய நான் பிராமணன் யெப்படியாவேன் நீர் சொல்லுமய்யாவென்று சிரித்தனன்.

அதற்கு நீ பிராமணன்தானென்பதற்கு பிராமணனுக்குள்ள குணங்கள் யாவும் உன்னிடத்தில் ரகசியமாக இன்னின்னதிருக்கின்றது இதை நீ உணர்வாயென்று அநேக ருசுக்களை அவனுக்கு அக்காசியென்கிற பிராமணன் கொடுத்தபொழுது அந்தக் காதியென்பவனது யெதார்த்தமான பிராமணவடிவத்தை மறைத்திருந்த அவன் மறதியானது சன்னஞ்சன்னமாய் கழிந்துவிட்டவுடனே நாம் பிராமணனேயன்றி வேறில்லையென்று சந்தேகவிபரீதங்களற்று தெளிவாயுணர்ந்தனன்.

அப்பா சிஷ்யா அப்படி நீ நீசத்தன்மையை அடைந்திருந்த அந்தக் காதியென்பவன் நாம் பிராமணனென்று தன்னையறிந்துகொண்டபின்பு மேல் அவன் நடக்கவேண்டிய காரியங்கள் யெவ்விதம் நீ கூறுவாயாக.

அதை ஆராய்ந்து கூறும்படியான தகுதி உனக்கு நேரிடின் அக்காதியென்பவனது தன்மையை முற்றிலும் நீ உடையவனாகலின் உனது யெதார்த்த சொரூபம் பிரமமென்று தெரிந்துகொண்ட நீயும் மேல்நடக்கவேண்டிய மார்க்கம் இன்னதென்று ஒருக்ஷணப்பொழுதில் உனக்கு வெளியாகும். இதை நன்றாய் ஆராய்ந்து உரைப்பாயென்று சீடனைநோக்கி ஆசாரியர் கூறினார்.

## சீடன் வினா.

சுவாமி அக்காதியென்பவனது தன்மையை முற்றிலும் உடையவன் நீயென்று அடியேனை கூறினீரே அவனது தன்மையை அடியேன் அடைந்ததெங்ஙனம் அதுவிபரத்தைத் தேவரீர் ஆக்ஞாபிக்கவேண்டியதுமன்றி அக்காதியென்பவன் தன்னைப் பிராமணனென்றறிந்துகொண்டதின்மேல் அவனடக்கவேண்டிய மார்க்கங்களின் விபரத்தையுந் தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்றுங் கூறினன்.

## ஆசாரியர் விடை.

நல்லது நீ கேட்டுக்கொண்ட இரண்டு சங்கதிகளில் அக்காதியென்பவனது தன்மையை முற்றிலும் நீ உடையவன்தானென்பதை முதலில் ரூபிக்கிறோம்.

அதாவது அககாதியென்பவன் தான் மகா உத்கிருஷ்டமான வர்ணத்தை உடைய பிராமணனாக இருக்க அதை மறந்து நாம் நீசனென்று தன்னைக்கருதி நீசகுலத்தில் சேருதல் நீச ஸ்திரீகளை விவாகித்தல் அவர்களிடமாய்ப் புதல்வர்களைப் பெறுதல் அப்புதல்வராதி களத்திரங்களையும் அவர்களுக்குரிய நீசர்களையும் ஸ்ரீ புத்திராளெனவும் மாமன் மைத்துனன் மாமியெனவும் முறைகளுறவுகள் பாராட்டி அவர்களைத் தனதென்று அபிமானித்து அவர்களுடனே கூடிக்குலாவி மகிழ்ச்சையுடன் வாழ்ந்திருத்தல், மாடறுத்தல், நண்டுமைச்சி முதலான புலாலாதிகளைப் புசித்தல் காலக்ஷேபத்தின்பொருட்டு ஒருவனுக்குள் அடிமைப்படுதல் அவனிட்ட வேலைகளையெல்லாம் குறைவரச்செய்து பொருளைச் சம்பாதிக்குதல், வரம்பு வாய்க்கால்களை வெட்டுதல், ஏடுகை நாத்துப்பறிகள் பறிமுதான நீசத்தொழில்களில்களாயுள்ள சமஸ்த விவகாரங்களையும் சலிப்பன்னியில் அவன் செய்துகொண்டுவருமிடத்தில் நாம் நீசந்தானென்றும் நமக்குரிய தொழில்களும் இன்பமும் இதுதானென்றும் வெகு நிட்சய புத்தியுடனே நிர்மாணித்து நீசத்தன்மையால் மூழ்கி அதன்மயமாகி அவனிருந்துவருங் காலத்தில் நாம் நீசனல்ல பிராமணனென்று தமது யெதார்த்த சொரூபத்தை நிச்சயமாக அககாசியென்கிற பிராமணனால் தெளிந்துகொண்ட ஸ்திதியில் அககாதியென்பவன் யெப்படி இருந்தானோ அதுபோலவே நீயும் அகண்டாகார சுயஞ்சைதன்னியமான பிரமமாகயிருக்க அதை மறந்து சீவனும் உடலும் ஒன்றேயெனவும் சீவனுடைய உடலே யாமெனவும் நீ உன்னைக்கருதி உனது உடல்வடிவத்தைப்போலொத்த உடல்களின் குலத்தில்ச் சேர்ந்திருந்து பெண்களிற் சிலதை விவாகித்தும் அவர்களி

னிடமாய் புதல்வரென்னும் உடல்களைப் பெற்றெடுத்தும் அவ்விருவகை உடல்களையும் அவ்விருவகை உடல்களுக்கும் உனதுடற்கும் உரித்தான உடல்களை நமது ஸ்ரீகளெனவும் புத்திரர்களெனவும் மாமன் மைத்துனன் மாமியெனவும் மாதாபிதா சகோதரர்களெனவும் முறைகளுறவுகள் பாராட்டி அவ்வுடல்களை நமதென்றபிமானித்து அவைகளுடனே கூடிக் குலாவி மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருந்தும் காலட்சேபத்தின்பொருட்டு அதிகச்செல்வத்தினை உடையோர்களுக்குள் சேவகம்புகுந்து அவரிட்ட ஊழியங்கள் யாவும் குறைவரச் செய்தலாதி பலவிஷயங்களில் பொருள்களைச் சம்பாதித்தும் நாமரூப கிரியைகளாயுள்ள சடமான பஞ்சபூத பவுதிக வடிவங்கள் துக்கமயமாயிருக்க அது மகா சுகாதிகளைக் கொடுக்கின்ற போகசாதன வஸ்துக்களென்று மதித்து அவைகளுடனே கூடிப் போகித்தும் வர்ணாசிரமத்துக்குரிய கிரிகைகள்முதலான வியவகாரங்களாயுள்ள சமஸ்த தொழில்களையும் யெவ்வளவும் சலிப்பன்னியில் ஜெகத்தோடுகூடி நீயும் விவகரித்துக்கொண்டுவருமிடத்தில் நாம் ஜீவன்தானென்றும் நமக்குரிய தொழில்களும் இன்பமும் இதுதானென்றும் வெகு நிட்சயபுத்தியுடனே நிர்மாணித்து சீவத்தன்மையில் மூழ்கி அதன்மயமாகி நீயும் இருந்துவருங்காலத்தில் ஜீவனும் உடலும் ஒன்றல்ல இரண்டும் வெவ்வேறெனவும நாம் அச்சீவனுமல்ல உடலுமல்ல பிரமமென்று உனது யெதார்த்த சொரூபத்தை நிட்சயமாக நம்மால் நீயும் அறிந்துகொண்ட ஸ்திதியில் இப்போதிருக்கின்றனையல்லவா.

அதுபற்றியே அக்காதியென்பவனது தன்மையை முற்றிலும் நீயுடையவனென்று நாம் மேற்கூறினோம் ஆதலால் அக்காதியென்பவனது தன்மையும் உனது தன்மையும் வெகு துல்லியபத்தில் சமமேயன்றி யெவ்வளவும் வித்தியாசமே இன்றென்று பின்னும் அதை வற்புறுத்தி ஆசாரியர் கூறிமுடித்தனர்.

## ஆசாரியரது மகான்மியத்தை சீடன் மகிழ்ந்துரைத்தல்.

சுவாமி காதியென்பவனது திருஷ்டாந்த மூலமாய் யெனது சுய வடிவமான பிரம சொரூபத்தையும் அப்படி பிரம சொரூபமாயிருக்கிற நான் சீவனாகி பந்தப்பட்டிருந்த மகா விசித்திரத்தையும் காதி யென்பவனது சரித்திரத்தைப்போலவே யெனது சரித்திர முழுமையும் இருந்திருக்கிற விபரத்தையும் மிகவும் தெளிவையுடைய கண்ணாடியைப்போல வெகு தெளிவாய் நான் உணரும்படி விளக்கிய தேவரீரது மகிமைப்பிரதாபங்களை யெடுத்துக்கூற அடியேனு தகுதியுடையவனென்று ஆசாரியரை சீடன் புகழ்ந்து நின்றனன்.

## ஆசாரியருத்தரம்.

அப்பா காதியென்பவன் தன்னைப் பிராமணன் என்று அறிந்துகொண்டதின்மேல் பழையபடி யெப்பவும் பிராமணனாகவே அவன் ஸ்திரமாய் விளங்கவேண்டுவதற்கு மார்க்கம் இன்னதென்பதையும் இனிமேல் நாம் கூறுகிறோம். அதாவது நீசனாக விளங்கிய அக்காதியென்பவன் தன்னைப் பிராமணனென்றறிந்துகொண்ட அந்தக்ஷணமே நீசர் சம்மந்தம், நீச விவகாரமுதலான நீசத்தன்மைகளாயுள்ள சகலத்தையும் ஒருங்கே கைவிட்டு நீங்கி பிராமண சங்கத்திற் சேர்ந்திருந்து நாம் நீசனென்கிற நினைப்பையும் மறந்து நாம் பிராமணனேயென்கிற நீங்காத நினைப்புடனே அவன் இருந்துவரவேண்டும்.

அப்படி நாம் பிராமணனென்பதை இடைவிடாமல் யெப்போதும் அவன் நினைத்துக்கொண்டிருக்கிற நினைப்பானது சிலகாலத்தில் முதிர்ந்து பிராமண வாசனையை திடமாயுண்டாக்கி நீசவாசனையைக் கெடுத்து பழையபடி பிராமணனாக்கிவிடும்.

அப்பா சிஷ்யா காதியென்பவன் தன்னைப் பிராமணனென்றறிந்துகொண்டதின்மேல் பழையபடி யெப்பவும் பிராமணனாகவே அவன் ஸ்திரமாய் விளங்கவேண்டுவதற்கு மார்க்கம் இதுவேதான். ஆனதால் நீயும் பிரமமென்று பரோக்ஷமாய் நீ இப்போதறிந்திருக்கிறதின்மேல் பழையபடி பிரமமாகவே நீயும் அபரோக்ஷமாய் விளங்கவேண்டுவதற்கு மார்க்கமும் இதுபோலவேதான். அஃதென்னையெனில்

நீ பிரமமென்பதாய் உனதெதார்த்த சொரூபத்தை யெப்போது நீ உணர்ந்தனையோ அதுமுதலே மேல்விவகாரமாய் கூறியபடிக்குள்ள ஸ்ரீ புத்திராதி உயிர்ச்சார்புகளாகிய முழுமூடர்களையும், ஜெகத்பிரவர்த்தியான ஜீவதன்மைகளாயுள்ள யாவையும் ஒருங்கே கைவிட்டு நீங்கி குருகுலத்திற் சேர்ந்திருந்து நாம் சிதாபாச சீவன் யென்கிற நினைப்பையுமறந்து நாம் பிரமமேயெனவும் நாமாகிய பிரமசொரூபத்திலிருந்தே சர்வஜெகத்துகளாயுள்ள நாமரூபதிரிசயங்கள் யாவும் நாமாகிய பிரமசொரூபமேயெனவும் நாமாகிய பிரமசொரூபம் ஒன்றேயன்றி ஜெகத்து யென்பது வேறில்லையெனவும் அங்ஙனம் இரண்டற்று சமஸ்தமுந் தானாய் விளங்குகின்ற அத்துவிதப் பிரமசொரூபமே நாமெனவுமான நினைப்புடனே யெக்காலமும் யிடைவிடாமல் நீ யிருந்துவரவேண்டும்.

அப்படி நாம் உபதேசித்திருக்கிற உபதேசவாக்கியத்தில் யெவ்வளவும் நீ ஐயுறாமல் அவ்வுபதேசப்பிரகாரம் நாம் பிரம்மமே நம்மிடத்திலிருந்து உண்டாகியிருக்கிற சர்வ ஜெகத்துக்களாயுள்ள நாமரூபதிரிசிய அவ்

துக்கள் சமஸ்தமும் நாமாகிய பிரமசொரூபமே அன்றி அவைகள் வேறில்லை யென்கிற நினைப்புடனே யெக்காலமும் வெகு நிச்சயபுத்தியாய் நீயிருந்து சாதிப்பாயானால் சிலகாலத்தில் அந்நினைப்பானது முதிர்ந்து நாம பிரமமேயென்கிற பிரமவாசனையையும் நிருவிகற்பத்தையும் திடமா யுண்டாக்கி சீவவாசனையைக் கெடுத்து பழையபடி நித்தியபரிபூரண சச்சி தானந்த பிரமமே நீயாக விளங்கும்படிக்கும் நிருதிசயானந்தத்தில் மூழ் கும்படிக்கும் செய்விக்கும். அப்போது ஜெகத்வாசனை முதலான சீவத் தன்மைகள் யாவும் ஒருங்கே கெடும். அது கெடவே, ஜெனனமரண மென்னும் பவமும் அடியோடே கெடும் சீவன்முத்தியுங் கைகூடும் ஆக வின் அந்தப்படி அந்நிலையில் நீ யிருந்துவருவாயாகவென்று ஆசாரியருப தேசித்தனர்.

இந்நிலையையே தன்னிலையெனவும் பிரமசமாதியெனவும் பிரம நிஷ்டையெனவும், பிரமானுஷ்டானமெனவும், பிரமானுபவமெனவும், பிரமானுசந்தானமெனவும், ஆத்மானுசந்தானமெனவும், பிரமத்தியான மெனவும், பிரமபாவனை யெனவும், ஏகபாவனை யெனவும் சுருதிகளும் மகத்துக்களும் கூறப்பட்டிருக்கின்றதெல்லாம்.

சங்கை.

இந்தப்பிரகாரம் பிரமோபதேசத்தை ஆசாரியார் சிடனுக்கனுக்கிர கம் பண்ணப்பெற்றுக்கொண்ட சற்சிடனானவன் தனக்கு அதிலுள்ள சில சந்தேகங்களை தெளிவிக்கும்பொருட்டு இதனடியில் விவரிக்கின்ற சங்கை களை ஆசாரியரிடத்தில் விண்ணப்பஞ்செய்கின்றனன்.

அஃதென்னனமெனின் சுவாமி மந்திரமுதலானவைகளையன்னி யில் நாம் பிரமமேயென்கிற துர்ப்பலமாகிய ஒரு நினைப்பினாலே அடை தற்கரிய மகா உன்னிதமான பிரமத்தை யெப்படி அடையக்கூடும் அந்த நினைப்புக்கு அவ்வளவு சக்தி யெப்படி உண்டாயிற்றென்று கேட்டனன்.

உத்தரம்.

அப்பா மந்திரமுதலானவைகளுக்கு சக்திகளிருக்கின்றதுபோல தியானத்துக்கும் சக்தியுண்டா இல்லையா? நீ புகலுவாயென்றனர்.

சிடன் ஒப்புக்கொள்ளுதல்.

ஆம் தியானத்துக்கும் சக்தியுண்டு யென்றனன்.

### ஆசாரியாருத்தரம்.

ஆனால் தியானமும் நினைப்பும் வேறல்லவே. தியானமே நினைப்பு நினைப்பே தியானம் அப்படி இரண்டும் ஒன்றானபடியினாலேயே தியானித்துவாவென்பதை நினைத்துவாவென்று மேலே உபதேசித்தோம் ஆனதால் தியானமாகிய நினைப்பினாலேயே பிரமத்தை அடையவேண்டுவது கிரமம் என்றனர்.

### சீடன் சங்கை.

சுவாமி நினைப்பே தியானமாகிறபடியால் அத்தியானத்தினாலும் பிரமத்தை அடையக்கூடாதென்பதாய்த்தான் அடியேன் இப்போது நினைக்கிறேன் சதாவும் ஓய்வில்லாமல் நினைத்துக்கொண்டிருக்கிற நினைப்புக்கு அவ்வளவுசக்தி யெங்கேயிருந்து யெப்படிஉண்டாகும் அதைத் தான் தேவரீர் இன்னபடியென்று உத்திரவாகட்டும் என்றனன்.

### ஆசாரியாருத்தரம்.

அப்பா யெழுகடலை நிகரொத்த நினைப்பானது சக்தியில் கிஞ்சந்தை உனக்குக் கூறுகிறோம் அதை நன்றாய்க்கேள் அஞ்ஞான திசையில் சொர்க்க மத்திய பாதாளமுதலான சமஸ்த உலகங்களாகவும் ஜீவேசுரர்களாகவும் தோற்றுகிறதும் நினைப்பே தோற்றிய அவ்வுலகத்தோடு கூடிப் போகித்தல் விவகரித்தல்முதலான யெத்தொழிலைச் செய்வதும் நினைப்பே சிதாபாசனாகப் பந்தப்படுவதும் நினைப்பே. ஞான திசையில் அஞ்ஞான திசையிலுள்ள மேல்க்கண்டவையாவும் மித்தையென்றும் அவைகளுக்கெல்லாம் ஆதாரம் பிரமமேயென்று தெளிவதும் பிரமத்தை அடைவதற்குத் தியானசமாதி முதலானவைகளை செய்வதும் முத்தியை அடைவதும் நினைப்பே.

இப்படி பந்த மோட்சமிரண்டும் இந்த இரண்டைப்பற்றி வருகிற சமஸ்த விவகாரங்களும் மனமாகிய நினைப்பினது சக்தியே அன்னியில் வேறொன்றுமில்லை.

அப்படி யெல்லாமாக விளங்குகின்ற சர்வவல்லமையுள்ள நினைப்பானது சக்தியை கிஞ்சித்தும் நீ அறியாமல் நினைப்புக்கு சக்தி யெங்கே இருந்து யெப்படி உண்டாகுமெனவும், அது மிகவும் அற்பமெனவும் யெளிதாக உணர்ந்தனையே இதென்ன ஆச்சரியம் அப்பா மாணாக்கர் என்றனர்.

## சீடன் வினா.

ஆனால் பந்தமோச்சயிரண்டும் அவைகளைப்பற்றிய சகல விசாரங்களும் நினைப்பினது சக்திதானென்பதற்கு சுருதிப்பிரமாணங்கள் யேதாவது உண்டா யென்றனன்.

## ஆசாரியர் விடை.

அதற்கு ஒரு உதாரணமாயிருக்கின்றது சுருதிகள் சாஸ்திரங்களெல்லாம் அப்படியேதான் சொல்லுகின்றது. வேணுமானால் பார்வையிட்டுக்கொள்ளுதி யென்றனர்.

## சீடன் வினா.

சுவாமி சுருதியாதிகளை அடியேன் பார்வையிட்டதில் நினைப்புக்கவ்வளவு சக்தியிருக்கின்றதுபோலதான் காணுகின்றது. ஆனால் பந்தத்தைக் கொடுத்து துன்பப்படுத்துகின்ற நினைப்பானது மோக்ஷத்தையும் இன்பத்தையும் யெப்படிக் கொடுக்குமென்றனன்.

## ஆசாரியார் விடை.

இடிகளைக் கக்கி மகா பெரிதான துன்பத்தைக் கொடுக்கின்ற மேகமானது மழைகளையும் வருஷித்து உலகத்துக்கெல்லாம் க்ஷேமகரமான இன்பத்தையும் கொடுக்கவில்லையா? அதுபோல பந்தத்தையும் துன்பத்தையும் கொடுக்கின்ற நினைப்பானதும் மோக்ஷத்தையும் இன்பத்தையும் கொடுக்கவேசெய்யும் இது அனுபவந்தான்.

நினைப்பானது மூடனுக்கு பந்தத்தையும் விவேகிக்கு மோக்ஷத்தையும் கொடுக்கும். ஆனால் மூடர்கள் பந்தத்தை அடைவது அவர்களின் பக்குவயீனத்தினால் வந்த தோஷமேயன்றி நினைப்பினது தோஷமேயல்லவென்றனர்.

## சீடன் வினா.

நல்லது மூடர்கள் பந்தத்தை அடைவது அவர்களின் பக்குவயீனமென்று போனாலும் பக்குவமுள்ள விவேகிகளாயுள்ளவர்களுக்கு நினைப்பானது மோக்ஷத்தைக் கொடுக்குமார்க்கத்தை தேவரீர் அடியேனுக்கு அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று கேட்டனன்.

## ஆசாரியார் விடை.

அப்பா நினைப்பானது விவேகியாயுள்ளவர்களுக்கு மோக்ஷத்தைக் கொடுக்கும் மார்க்கத்தை விவரமாய் உனக்கு உணர்த்துகிறோம். அதை நன்றாய் ஸூக்ஷ்மமாய்க்கேள் அதாவது சிதாபாசனானவன் யெதை யெதை நினைக்கிறானோ அந்நினைப்புகளுள்ளவனுக்கும் அப்படி நினைத்தநினைத்த பொருள்களின் வடிவங்களே அவனாவான். அந்த நினைப்புகளை யெப்போ தெப்போது அவன் மறக்கிறானோ அப்போதப்போது அவ்வடிவங்களை விட்டு அவன் நீங்குவான்.

அஃதெங்ஙனமெனில் சிதாபாசனானவன் மாங்காயை நினைத்தால் அந்நினைப்புள்ளவனையும் பச்சைநிற முதலானவைகளோடு அம்மாங்கா யெப்படி இருக்குமோ அதுபோலவே அந்நிறமுதலானதுகளோடு மாங்காயின் வடிவமாகவே அவனும் ஆவான். கத்திரிக்காயை அவன் நினைத்தால் அக்காயின் வெள்ளைமுதலான நிறங்களோடவும் காம்புமுதலானதுகளோடவும் அக்கத்திரிக்காயின் வடிவமே அவனும் ஆவான். மாடுமுதலான மிருகாதிகளை அவன் நினைத்தால் அம்மாடுமுதலான மிருகாதிகளின் வடிவங்களே அவனும் ஆவான். விருக்ஷாதிகளை அவன் நினைத்தால் அவ்விருக்ஷாதிகளின் வடிவங்களே அவனுமாவான். பெண்களை அவன் நினைத்தால் அப்பெண்களினது வடிவங்களே அவனுமாவான். பின்னும் யெதை யெதை நினைத்தானோ நினைத்த நினைத்த பொருள்களின் மயமே அவனாவான். இதுவே சிதாபாசனானவன் நினைத்த நினைத்த பொருள்களின் வடிவங்களை அவன் அடைகிற விவரம்.

அப்படி நினைத்த பொருள்களின் வடிவங்களை அடைகிற சிதாபாசனானவன் அப்பொருள்களின் வடிவங்கள்விட்டு நீங்குகிற மார்க்கத்தை இனிமேல் சொல்லுகிறோம்.

அஃதெங்ஙனமெனின் சிதாபாசனானவன் அப்படி மாங்காயை நினைத்துக்கொண்டிருக்கிறவரையிலும் அம்மாங்காயின் வடிவத்தை அடைந்திருப்பான். அம்மாங்காயைவிட்டு தேங்காயை அவனினைத்தால் அத்தேங்காயின் வடிவத்தை பின்பு அவனடைவான். அப்பொழுது முன்பு அவனுக்கு உண்டாயிருந்த மாங்காயின் வடிவத்தைவிட்டு அவன் நீங்கினவனல்லவா அப்படித் தேங்காயின் வடிவத்தை அடைந்திருந்தவன் அத்தேங்காயைவிட்டு வெள்ளியை அவன் நினைத்தால் அவ்வெள்ளியின் வடிவத்தை பின்பும் அவனடைவான். அப்பொழுதும் முன்பு அவனுக்குண்டாயிருந்த தேங்காயின் வடிவத்தையும் விட்டு அவன் நீங்குவானல்லவா இப்படி அந்த

எந்தப் பொருள்களை அவன் மறந்தானோ அந்தப்பொருள்களின் வடிவங்களைவிட்டு அவன் நீங்குவான். இதுவே சிதாபாசனென்பவன் நினைத்த நினைத்த விஷயப்பொருள்களின் வடிவங்களை அடைந்திருந்தவன் அப்பொருள்களின் வடிவங்களை விட்டு அவன் நீங்குகிற மார்க்கம் இந்தப்பிரகாரம் ஒருகணப்பொழுதுக்குள்ளே கோடாகோடி விஷயப்பொருள்களை சிதாபாசனென்பவன் நினைப்பதில் அக்கோடானகோடி பொருள்களின் வடிவங்களை அவனடைகுதலும் மறப்பதில் அப்பொருள்களின் வடிவங்களைவிட்டு அவன் நீங்குதலும் ஆவான்.

11716

அப்பா மாணாக்கனே இன்னமும் மகா பெரிதான ஒரு ஆச்சரியமிருக்கின்றது அதையும் சொல்லுகிறோம் கேளு அதாவது பஞ்சபூதபௌதிகமான ஒரு சரீரத்தை சிதாபாசன் யெடுத்தல் அது எப்படி அவனுக்கு ஒரு ஜென்மமும் ஒரு பிறப்புமோ அதுபோலவே நினைப்பினால் வந்த ஒரு விஷயப்பொருள்களின் வடிவத்தை அவனடைதலும் அதுவும் அவனுக்கு ஒரு ஜென்மமும் ஒரு பிறப்புமே ஆகும் சரீரத்தைவிட்டு சிதாபாசன் நீங்குதல் அது யெப்படி அவனுக்கு ஒரு இறப்பாகுமோ அதுபோலவே அவ்விஷயப்பொருள்களின் வடிவத்தைவிட்டு அவன் நீங்குதலும் அதுவும் அவனுக்கு ஒரு இறப்பே ஆகும்.

ஒரு கணப்பொழுதுக்குள்ளே கோடாகோடி விஷயப்பொருள்களின் வடிவங்களை சிதாபாசன் அடைதலும் அவ்வடிவங்களைவிட்டு நீங்குதலும் ஆவானென்று நாம் மேலே சொல்லப்படுகிறபடி ஒரு கணப்பொழுதுக்குள்ளே கோடாகோடி பிறப்பையும் இறப்பையும் அவனடைவானானால் அவனது பூரணாயுள்வரைக்கும் வருஷம் யெவ்வளவு அதற்கு மாசம் யெவ்வளவு அதற்கு நாள் யெவ்வளவு அதற்கு நாழிகை யெவ்வளவு அதற்கு கணம் யெவ்வளவு அதற்கு அவன் அடைந்திருக்கிற பிறப்பு யெவ்வளவு இறப்பு யெவ்வளவு யென்பதை யெப்படி எண்ணி அளவிட்டுமுடியும் முடியாது. ஒருவேளை சமுத்திரத்தின் மணலை எண்ணி அளவிட்டாலும் அளவிடலாம் இப்பிறப்புகளை அளவிடவே முடியாது.

அப்படிப் பூரணாயுஸான ஒரு ஜென்மத்துக்குள் யெண்ணிக்கை அளவில்லாத மகாகோடி மகாகோடியான பிறப்புகளையும் இறப்புகளையும் அச்சிதாபாசசீவனடைந்திருக்க ஒரு பிறப்புக்காவது பிறந்தானேயென்கிற சந்தோஷத்தையும் சாதகம் வருத்தல் சினி தாய்மூலம் விளங்குதல் முதலான சுபத்தையும் ஒரு இறப்புக்காவது இறந்துபோனானே யென்கிற துக்கத்தினால் அழுகை முதலான அசுபத்தையும் கட்டோடே யெவ்வளவும் நடத்தாமலிருக்கிற உலகத்தார் பஞ்சபூதபௌதிகமான சரீரத்தோடு

பிறக்கிற பிறப்புக்கும் அச்சரீரம் நசிப்பதான இறப்புக்குமட்டும் பிறந்தானென்கிற சந்தோஷத்தையும் சாதகம்வருத்துதல் சீனி தாம்பூலம் விளங்குதல் முதலான சுகங்களையும் இறந்துபோனான் யென்கிற துக்கத்தையும் அழுகைமுதலான அசுபங்களையும் விளக்கமாக வெகு ஆடம்பரத்துடனே அவ்வுலகத்தார் நடத்திவருகிறார்களே இதென்ன காரணம் அப்பா சீஷா இதை நீ சொல்லுதியென்று ஆசாரியர் உரைத்தனர்.

## சீடன் கூறுதல்.

சுவாமி பூரணாயுசான ஒரு ஜென்மத்துக்குள் சிதாபாசன் அளவிறந்த பிறப்பிறப்புகளை அடைகிறதைத் தகுந்த அனுபவ ரூபமாய் தேவரீர் அடியேனுக்கு உணர்த்தினீர் ஆனதினால் அது யதார்த்தமென்பதற்கு யெவ்வளவும் ஐயமில்லை. ஆனால் சரீரத்தோடு பிறக்கிற பிறப்புக்கும் அதன் இறப்புக்கும் நடத்துகின்ற சுபாசுபங்களை அவ்விதமான பிறப்பிறப்புகளுக்கும் அப்படி உலகத்தார் நடத்தாமலிருக்கின்றது யென்னகாரணத்தினாலே யென்பதாய் அடியேனும் யோசித்துக்கொண்டேதானிருக்கிறேன். அதைத் தேவரீர்தான் உத்திரவாகவேண்டுமென்றனன்.

## ஆசாரியாருத்தரம்.

அப்படி ஒரு ஜென்மத்துக்குள் அளவிறந்த பிறப்பிறப்புகளை சிதாபாசனடைகிறானென்பதை ஆத்துமவிசாரம்பண்ணித் தெளிந்த விவேகிகளினது அதிசூட்சமமான அறிவினாலே அறியவேண்டுமேயன்றி அவ்வித யோக்கியதைகள் யெவ்வளவுமில்லாத சுத்தப் பாமரர்களாய் உலகத்தாருக்கு அப்பிராட்பிறப்புகள் உண்டாகிற மார்க்கமே யெவ்வளவுந் தெரியமாட்டாது. இதுவேதான் காரணமென்றனர்.

பஞ்சபூத பவுதிக சரீரத்தைச் சிதாபாசன் அடைதலும் நீங்குதலும் அது ஸ்தூல பிறப்பிறப்பெனவும் நினைத்த நினைத்த விஷயப்பொருள்களின் வடிவங்களை அவனடைதலும் நீங்குதலும் அது சூட்சம பிறப்பிறப்பெனவுங் கொள்க.

## சீடன் ஒப்புக்கொள்ளுதல்.

சுவாமி அதுவும் யதார்த்தமாகவே இருக்கலாமென்று ஒப்புக்கொண்டனன்.

## ஆசாரியருத்தரம்.

அப்படி விஷயப்பொருள்களின் வடிவங்களை சிதாபாசனடைதலும் அவ்வடிவங்களை விட்டு அவனீங்குதலுமான கருத்தெல்லாம் விஷயப்

பொருள்களை அவன் நினைத்ததினாலேயே அப்பொருள்களின் வடிவங்களை அவனடைந்தனன். அப்படி நினைத்த பொருள்களை அவன் மறந்ததினாலேயே அப்பொருள்களின் வடிவங்களை விட்டு அவன் நீங்கினன்.

இதற்கு ருசுவாகவும் முற்றிலும் வெகு பொருத்தமாகவும் யிருக்கின்ற ஒரு பிரத்தியட்சானுபாவத்தை இன்னமும் நாம் சொல்லுகிறோம் அதாவது உலகத்தில் கிருமிகளானவை குளவிகளின் சரீர வடிவங்களையே யிடைவிடாமல் நினைத்துக்கொண்டேயிருந்து, சிலகாலத்துக்குப்பின்பு அக்குளவிகளின் சரீரவடிவங்களையும் அதன சுபாவ குணங்களையும் அக் கிருமிகளானது அடைந்து சுயம்பான குளவிகளாக விளங்குவதை பிறத்தியட்சமாய் உலகத்திலுள்ள யாவத்திராளும் அறிவார்களே அது உனக்கும் தெரியுமா தெரியாதா நீ சொல்லுயென்றனர்.

சீடன் ஒப்புக்கொள்ளுதல்

சுவாமி கிருமிகளானவை குளவிகளின் வடிவங்களை நினைத்துக் கொண்டே இருந்ததினால்த்தான் அக்குளவிகளின் வடிவங்களை கிருமிகளானது அடைந்தது அது அடியேனுக்குத் தெரிந்ததுதான் யென்றனன்.

ஆசாரியாருத்தரம்.

பார்த்தாயா மாணாக்கனே அந்தக் கிருமிகளானதும் குளவிகளின் சரீரவடிவங்களையே இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருந்த நினைப்பினாலேயே அல்லவா அக்குளவிகளாய் கிருமிகள் ஆனதும் குளவிகளின் வடிவங்களை கிருமிகள் அப்படி சிந்திக்கும்பொழுது தங்கள் கிருமியின் வடிவத்தை அதுகள் மறந்து அல்லவா அந்த மறதியினாலேயே அக்கிருமியின் வடிவத்தைவிட்டு அதுகள் நீங்கினதும்,

இந்தப்பிரகாரந் தனக்கு அன்னியமாக இருக்கின்ற மாங்காய்முதலான திரிவியப்பொருள்களையும் அன்னிய சரீரத்தையும் சிதாபாசனானவன் நினைத்துக்கொண்டிருந்த நினைப்புகளினாலே அம்மாங்காய் முதலான திரிவியப்பொருள்களின் வடிவங்களையும் அன்னிய சரீர வடிவத்தையும் அச்சிதாபாசன் பிரத்தியட்சமாய் அடைந்திருக்கிற விஷயத்தில் தனது சுயவடிவமான பிரமசொரூபத்தையும் அவன் யெக்காலமுமிடைவிடாமல் நினைத்துக்கொண்டிருக்கிற அன்னினைப்பினாலே அப்பிரமசொரூபத்தையும் அச்சிதாபாசன் வெகுசுலபத்தில் யேனடையமாட்டான்? அடையவே செய்வான் இது சத்தியம்.

## இதன் கருத்து.

அன்னிய வடிவங்களனைத்தையும் நினைப்பினாலடைகின்ற சிதாபாசனானவன் தனது சுயவடிவமாகிய பிரமசொரூபத்தையும் அந்நினைப்பினால் அவன் யேனடையமாட்டானென்பதும் சிதாபாசனானவன் மேற்கூறிய மாங்காய்முதலான யெந்த யெந்தப் பொருள்களை நினைத்துக்கொண்டிருந்தானோ அந்தந்தப் பொருள்களின் மயமே அவன் ஆவான் யென்றால் அதுபோலவே பிரமசொரூபத்தையும் அவன் நினைத்துக்கொண்டிருந்தால் அப்பிரம சொரூபமும் அவன் ஆவானல்லவா இதற்கு சமூகியமும் ஒரு விசாரணையும் எதுக்கு யென்பதுந்தான் அதன கருத்து.

மாங்காய் முதலான பொருள்களின் வடிவங்களை அடைந்திருந்த சிதாபாசனானவன் அப்பொருள்களை மேற்கூறிய விவரப்படி அவன் மறந்த மறதியினால் அவ்வடிவங்களை விட்டு அவன் நீங்கினதாகவும் அன்றியும் கிருமியின் வடிவத்தை அடைந்திருந்த சிதாபாசனானவன் அக்கிருமியின் வடிவத்தை அவன் மறந்த மறதியினால் அவ்வடிவத்தைவிட்டு அவன் நீங்கினதாகவுமிருக்கிற விஷயத்தில் நாம் சிதாபாசன் யென்பதையும் அவன் மறக்கிற மறதியினால் அச்சிதாபாச வடிவத்தையும்விட்டு அவன் யேன் நீங்கமாட்டான் நீங்கவேசெய்வான் இதுவும் நிட்சயம்.

ஆதலால் மாணாக்கனே இப்போது அடைந்திருக்கிற பொய்யான சிதாபாசத்தன்மையை நீ மறக்கிற மறதியினாலும் உனது யெதார்த்தமாகிய பிரமசொரூபத்தை நீ தியானிப்பதாகிய நினைப்பினாலும் சிதாபாசத்தன்மையைவிட்டு நீங்கி பிரமசொரூபத்தையும் சித்தமாய் நீ அடையவே செய்வாய் சத்தியம்.

அப்பா சேஷா நினைப்பு மறப்புகளின்தன்மைகளையும் பந்தமோக்ஷம் உண்டாகிற மார்க்கத்தையும் சுருக்கமாய் இதுகாறும் உனக்கு உணர்த்தினேமே யெல்லாம் ஆவதும் அழிவதும். சிதாபாசச்சொரூபம் ஆவதும் அச்சிதாபாசச்சொரூபங் கெடுவதும் பிரமசொரூபம் ஆவதுமாகிய சமஸ்தமும் நினைப்பு மறப்புகளினாலேயே யென்று நீ நன்றாய் உணர்ந்துகொண்டனையா நினைப்பினாலே பிரமசொரூபத்தை யெப்படி அடையக்கூடுமென்கிற சந்தேகத்தை விடுத்தாயா, யென்று நீ சொல்லென்று ஆசாரியார் கூறி நிறுத்தினர்.

முற்றிற்று.

# பிரஹ்மவித்தை.

வினா:— சுவாமி உலகத்தில் யாவரும் பேசிக்கொள்கிற அருமைப்பாட்டில் இது பிரஹமவித்தையாவென்று கேட்பது மிக அருமையாயிருக்கிறதே இது விபரம் உத்திரவாகவேண்டுமென்று கேட்டான்.

விடை:— ஆம் ஏனெனில் பிறப்பை மாற்றுந்தன்மை இவற்றையன்றி வேறில்லாததினால் அருமைதான்.

வினா:— சுவாமி பிறப்பை மாற்றுந்தன்மை வேறு எந்தவகையினும் கூடாதோ?

விடை:— கூடாது ஏனெனில் பற்று பிறப்புக்குள்ள வித்து. ஆகையால் பற்றற்ற நிலை இவற்றையன்றி சொல்லவும் பிரமாணிக்கவுங் கண்டிலம்.

வினா:— சுவாமி இதுகூறுவது கூடாது என்னவெனில் சாலோக, சாமீப, சாருபமாகிய முத்திநிலையை தர்மம், யாகம், விரதம், பக்தி, சகுணோபாசனை முதலிய யோகாப்பியாசத்தால் கிடைக்கப்பெறுவதாகவும் அதைநம்பி உலகத்தவர்கள் பெரும்பாலும் ஆலயப்பிரதிஷ்டைமுதலிய சத்கருமானுஷ்டானங்களை முன்னும் பின்னும் கணக்கிறந்த வகையாகச் செய்யாண்டு நடத்திவருகின்றனர்கள். இவற்றை நோக்கி விசாரிக்குமிடத்து நீர் கூறுவது யுக்திவாதமேயன்றி சாஸ்திரப்பிரமாணமாகாது.

விடை:— அப்பா நீ சாஸ்திரப்பிரமாணமாகாதென்று மிக்க கோரவிருத்தியோடு கூறுவது கூடாது எப்படியென்றால் முத்திப்பேற்றை மூன்று பகுப்பாய் நீ கூறியது மெய்தான் அது நிற்க சாயுச்சியமென்று கூறும் நான்காம்பத முத்தியை எந்தப்பிரகாரமடையலாமென்று முன் விசாரித்ததுபோல் இதுவும் விசாரித்திருக்கலாமே அதைத் தெரிந்தமட்டுஞ் சொல்லு.

வினா:— சுவாமி நீர் கூறிய சாயுச்சியமென்னும் நான்காவதாகிய பரமுத்தியானது மேற்கூறிய மூன்றுபதமுஞ் சித்தியானபின் அடையப்படும் பரிபூரணானந்த வடிவமே சாயுச்சியமென்னும் நிலையென்று கேட்டிருக்கிறேன். சாஸ்திரப் பிரமாணத்தைக் கேட்டிலேன். இருந்தால் சொல்லியிருப்பார்கள். இல்லாததினால் சொல்லவில்லையென்று நினைக்கிறேன்.

விடை;— அப்பா நீ சொல்லும் வசனம் மிக நகைப்புக்கிடம், ஆனால் இதையறிய சர்ச்சங்க பிரவர்த்தியிருந்தால் எளிதில் அறிந்திருக்கலாம் அவ்விருத்தியில்லாததினால்த் தோன்றவில்லை.

வினா:— சுவாமி நான் சொல்லுகிறது நகைப்புக்கிடமென்றது என்னை?

விடை:— அப்பா நகைப்புக்கிடந்தான். ஏனென்றால் வேதாகமமுதலிய உபநிஷத்தாதி யிவைகளைக் கற்றுணர்ந்த பெரியோர்கள் சாங்கோபசாங்கமாய்ப் பிரபல சுருதிகளைக் கூறியிருக்கிறார்கள். இவற்றைக் கொஞ்சமுங்கூடக் கவனியாது சாயுச்சியமென்றது வேறாயில்லையேயென்று சொன்னாய் அதுதான் நகைப்புக்கிடம்.

வினா:— சுவாமி சாயுசசியமென்றது என்னை?

விடை;— பிறப்பிறப்பற்ற ஐக்கியநிலை.

வினா;— இவ்வைக்கியம் எனக்கு யெப்படிக்கூடும்?

விடை;— அப்பா முன்சொன்ன சத்சங்கவிர்த்தியோடு முறைப்படி சாஸ்திரவிசாரணை பண்ணி அய்யந்திரிபர உணர்த்த சற்குருவினால் ஞானத்தைப்பெற்று திடம்பற்றித்தானே தன்னிலையில் நிரதிசயானந்தமடைந்த அவசரமே அய்க்கியம் பிறப்பு நீங்கும்.

வினா:— சுவாமி பிறப்பிறப்பறும் நெறிசைவ நெறியினரான சாதுக்கள் சமயம் விசேடம் நிர்வாணம் முதலிய தீக்ஷைபெற்று பக்தியோடு ஈஸ்வர உபாசனைசெய்து நால்வர்கள்பாடல் முதலிய தோத்திரப்பாக்களை விடாது ஸ்தோத்தரிப்பாயாகில் அநேகமாய் இரண்டு மூன்று ஜென்மத்தில் ஸ்ரீ சாட்சாத் சிவபெருமான் மழுமானுடையராய் விடையேறி பிரசன்னமூர்த்தமாய் யெழுந்தருளி திருவாக்களித்து ஸ்ரீ ஔவையான உத்தமதேவியை ஸ்ரீ கணபதிமூர்த்தியானவர் துதிக்கையினாலெடுத்து கைலையில் விடப்பெற்றதுபோல வழியறிவிப்பரென்பது யாவர்க்கும் பிரசித்தம். ஆகையால் தாங்கள் இந்தவழியோரிடத்தில் கேட்டிருப்பதில்லையென்று நினைக்கிறேன்.

விடை:— அப்பா நீ நாஸ்சொன்ன முன்குறிப்பை இன்னும் அறியவில்லை ஏனென்றால் பிறப்பிறப்பினிடத்திலுள்ள துக்கந் தோன்றாது மறந்தவடிவாய்ச் சொல்லுகிறாய் அதாவது நீ செய்யுங் கருமம், காமியம், நிஷ்காமியம், என இரண்டு பகுப்பு அதில் காமியார்த்தமாய்ச் செய்யப்படும் கருமங்களில் யிடையிடை நிஷ்காமியங்கூடி

அநேக ஜென்மங்களிற்சேர்ந்த நிஷ்காமிய புண்ணிய பலத்தினால் மானசசுத்தியடைந்து விசாரணையாகிய குறிப்பில் சித்தப்பற்றி சற்குருவையடைந்து, நான்யெது, உலகம்யெதுயெனத்தோன்றி தெளியவரும்பின் சதாவும் பழகப்பழக அசுத்தவாசனை நீங்கி சுத்த வாசனையோடுகூடிய அநுபவத்தில் தூங்கினவன்கை வெற்றிலை நழுவினதுபோல சகலகரும சிந்தனைகளும்விட்டு தன்னையே சுத்தி பரனாய்ப் பிறப்பிறப்பற்ற விதேக முத்தி பரமானந்தத்தை அடைவாய். காமியம் புண்ணியத்துக்கேற்ப பிறப்பைக்கொடுக்குமென்பது பிரசித்தம்.

வினா:— சுவாமி நீர் கூறிய பிறப்பிறப்பினிடத்திலுள்ள துக்கம் பிரசித்தம் யெப்படியென்றால் பிறப்பின்கண் ஐவகைதுக்கம் இறப்பின்கண் அநேகவிதமான துக்கமென்பது ஐயமில்லை இப்பிறப்பிறப்பு தேவர்களுக்கானாலும் ராஜாவுக்கானாலும் துக்கமென்பதே சர்வசாஸ்திரம் பிரதிபாலிக்கிறதோடு அநுபவப்பிரமாணங்களுஞ் சரியொத்திருக்கிறது ஆகையால இப்பிறப்பை நிவர்த்திக்கவேண்டியதவசியமே. ஆனால் காமியமாகிய இச்சை பிறப்பைக்கொடுத்துவிடுமாயென்பது யெனக்குச் சந்தேகம், மேலும் ஈஸ்வரனும் அநாதி நித்தியம் சீவர்களும் அநாதிநித்தியமாயிருக்க பூர்வம் பிறப்பிறப்புக்குக் காரணந்தான் எவை? மத்தியில் அநேகவித பிறப்பை அடையுமென்பதுதான் யெப்படி? அந்தமாகிய மகாப்பிரளயத்தில நசித்து சூக்கும வடிவாயிருந்து பின் சிருஷ்டிப்புக்கெத்தனமாயிற்றென்பதுதான் யெப்படி? அதை தெரிவிக்கவேண்டும்.

விடை:— அப்பா நீ இவற்றையெல்லாம் பெரியோர்களிடத்தில் கேட்டிருப்பாயென்று நினைத்து நான் அநேகவிதமாய்ச் சொல்லவேண்டியதைச் சங்கிரகமாய்ச் சொன்னேன். ஆனால் இவையும் உனக்கு நன்றாய் விளங்கவேண்டியவைதான். எப்படியென்றால் சுத்தப்பிரம்மமாயிருந்த வஸ்துவினிடத்தில் சுத்தமாயை அசுத்தமாயையென இரண்டு சாயைகளாகியவைகளில் சுத்தமாயை ஈஸ்வரன் அசுத்தமாயை சீவன் இவற்றை சர்வஞ்ஞன், கிஞ்சிஞ்ஞன்யெனக் கூறுவதுண்டு ஆகையால் சர்வஞ்ஞத்துவமுள்ள ஈஸ்பரன் கிஞ்சிஞ்ஞத்துவமுள்ள சீவர்களுக்குத் தனுகரண புவனபோகமுண்டாக இச்சையுடையவராயினர். இதுவே பிறப்பிறப்புக்குக் காரணம். இவையொடுக்கம் யெப்படியென்றால் சூரியனிடத்தில் நமக்

ளத் தோன்றுஞ் சாயை சூரியன் உச்சிமுகத்தில் வரத்தோன்று வாறுபோல ஈஸ்பரன் இச்சாசக்தி ஒடுக்கமே மகாப்பிரளயம். இப்படி மகாப்பிரளயத்திலொடுங்கி சிருஷ்டித்துவரும் மூலகா ரணமான ஜீவர்கள் தன் அஞ்ஞான நசிப்பையடைவது யெப்படி யானால் சாயைக்குத் தன்னுருவம் காரணமாதல்போல பிறப்பிறப் புக்குக் காரணம் தன் மறதி இவற்றையறிந்து ஒழிப்பதே முத்தி. ஆகையால் சிருஷ்டிதொடங்கி இதுகாறும் நாம் அடைந் துள்ள பிறப்பு எத்தனையோ அவற்றையறிகிலம் இவற்றையெல் லாம் அறிந்துள்ளவன் சுத்தமாயையையுடைத்துள்ள சர்வஞ்ஞன் ஏனெனில் சிருஷ்டிதொடங்கி முடிவுவரை ஏகப்பிறப்பினரா யுளர். இவர் இவ்வொரு சிருஷ்டிமுடிவினிடை அசுத்தமாயை யுடைத்தான ஜீவர்கள். அநேகப் பிறப்பினராயுள்ள அவரவர் கருமானுபவங்களுக்கேற்ற செயல்களையுஞ் செய்வித்து தற்பிறந் ஞருயோடு இருந்துள்ளவராய் சர்வசுருதிகளுங் கூறியுள்ள ஆகை யால் பிறப்புதுக்கமென்றும் பிறப்புக்குக் காரணம் இச்சையென் றும் நமது வேதாந்த சுருதிகள் அறுவகைப் பிரமாணங்களோடு பிரதிபாதிக்கின்றன.

வினா:— சுவாமி ஆனால் இப்பிறப்பை யோசிக்கும்போது இச்சிருஷ்டிப் பிறப்பில் ஈஸ்பரன் ஏகம், ஜீவர்கள் அநேகம் பிறப்புவென்றால் அவசியம் பிறப்பை மாற்றவல்ல இந்த அத்துவைத நெறி சீக்கிரம் அடைய விரும்புகிறேன். மேலும் இவ்வழியை நம்பித் துணிவு கொண்டால் பிறப்பின் நசிப்பைக் கொடுக்குமோ தவருமோ யென்று சந்தேகமான ஓர் பிடிப்பும் என்மனதின்கண் கூடத் தொடருகிறது.

விடை:— அப்பா நீ கேட்கவேண்டியது அதிகமிருக்கிறது. ஏனெனில் நான் இவ்வளவுதூரஞ் சொல்லிவந்த விவகாரங்களில் ஊன்றி யோசித்தறிவாயாகில் ஒன்றுஞ் சந்தேகப்படாது மேலும்

நான் இதற்குபமானமாக இரண்டு கவி சொல்லுகிறேன் கேள்.

விருத்தம்.

சீர்கொண்ட வேதத்தின் அங்கமதாய் உலகமதில் சிறப்புற்றோங்கும்
பார்கொண்ட சோதிடத்தின் பலன்படியே நடந்துவரப் பார்த்தோம்நாளும்
பேர்கொண்ட அத்துவிதப் பெரும்நிலையை அவ்வேதம் பேணிக்கூற
நேர்கொண்டு கொள்ளாது அஞ்ஞானம் நெருக்குற்ற நினைவினாலே,

2 வேதம்சொன்ன மந்திரத்தின் விதியே நடந்து விளங்கிநிற்க
வேதம்சொன்ன சோதிடத்தின் விதியேகிரண வெளிகாண
வேதம்சொன்ன மருந்தினத்தின் விதியேரோக விஷம்வோட
வேதம்சொன்ன அத்விதத்தின் விதியேநடவா தெங்ஙனமோ.

வினா:— சுவாமி நீர் சொல்லிய விவகாரம் முற்றிலும் நம்பத்தக்கதுதான். இந்த நிலையையடையவும் இவற்றைச் சொல்பவர்களிடம் கேட்கத் தான்வேணுமென்றும் மனது உறுதிப்பட்டது. ஆகையால் இதை நீர்தானே சொல்லவேண்டியது.

விடை:— அப்பா! ஆனால் நான் சொல்லுகிறேன் முன்னமே சாயுச்சியமானது இன்னவையென்று தெரியவில்லையென்றாய் ஆகையால் நீ இந்த வேதாந்த சாஸ்திரங்களைப் பழகி வரவரக் கொஞ்சங்கொஞ்சமாய்ப் பிறப்பின் துக்கம்தோன்றி யிந்த பிறப்பைவிட்டால்யெப்படி அடையக்கூடுமென்ற தீவரமும் ஈஸ்பரன், குரு இவர்களின் பெருமைப்பாடும் பெரியோர்களிடத்தில் பக்தியும், கொஞ்சநேரமுங்கூடக் காலம் கழிக்காமல் சென்றநாள்க்கிரங்கி ஜகத்விருத்தியை துச்சமாக, சீயென வெறுத்து மனம் சுருங்கி உண்மையையே மன்னி சத்துவாபத்தியென்னும் நான்காம் பூமியையுடையோனாய் அதுமுதல் சங்கிலித்தொடர்போல் மற்று மூன்று பூமியுங் கைவரும். முத்திப்பேற்றையடைவாய் ஜீவன்முக்தனாய் இது உண்மை.

வினா:— சுவாமி இந்த வேதாந்த சாஸ்திரங்கள் யெவையெல்லாம் இவற்றை முற்றிலும் தற்காலம் கையாண்டுவருபவர்களும் பூர்வீகநிலையுடையவர்களும் யார், யார், இதனை விளக்கவேண்டும்.

விடை;— அப்பா நீ கேட்பது நான்சொல்லியவைகளை நன்றாய் யோசித்து உறுதிகொண்டவனைப்போலக் கேட்கிறாய் இது மிகவும் நல்லதுதான். நீ உண்மையோனானாய் யென்பது சந்தோஷங்கொண்டேன். நூல்விபரங்களை நான் கேட்டதுதான் சொல்லவரும் அதற்குமேல் சொல்லவராது. ஆனால் இந்த வேதாந்தவழி அறிபவர்கள் முதலாவது நானாஜீவவாதக்கட்டளை, வைராக்கியசதகம், வைராக்கியதீபம், அபிரோத உந்தியார், கைவல்லிய நவநீதம், பஞ்சதசி, ஞானவாசிஷ்டம் முதலிய நூல்கள் ஒருமுறை இன்னும் சிலர்கள் நானாஜீவவாதக்கட்டளை, பாலபோதம், விசாரசந்திரோதயம், விசாரசாகரம், விருத்திப்பிரபாகரம், பஞ்சதசி, ஸ்ரீ சங்கராச்

சாரியசுவாமி அவர்களின் கீதாபாஷிய முதலியவை ஒருமுறை இன்னும் இவைகளைவிட கணக்கிறந்த நூல்களிருக்கின்றன. சொல்லிவைப்பவர்கள் ஏதாம் ஒரு நூல்கொண்டும் நிலையை அறிவித்துவிடுவதுமுண்டு. ஆகையால் நீ போலிஞானியர்களைவிட்டு சற்குருவினிடம் முறையாய்க் கேட்டவர்களிடம் முறையாய்க் கேட்டுத்தெளி மேலும் உலகர் தெளிந்தவைகளைப்போல ஒன்றைக் கற்று மற்றொன்றாய்க் கருதிச்செல்வதுமுண்டு பிடிவாதமாய் சுருதியுக்தி அனுபவத்திற்குப் பொருந்தாது கூறுவது பிரௌடிகவாதம் யென்பார்கள்: ஆகையால் இவற்றையெல்லாம் யோசித்துக்கொள். நானும் சொல்லவேண்டியவைகளைக் கேட்டால் பின் சௌகரியகாலத்தைச் சொல்லுகிறேன். அப்போது வந்து கேட்டுக்கொள். மேலும் ஆதிசுவாமி சங்கராச்சாரியரவர்கள் வித்தியாரண்ய சுவாமிகள், ஆளவந்தா சுவாமிகள், தாண்டவராய சுவாமிகள், நிச்சலதாஸ், பீதாம்பரஜீ இவர்களும் தற்காலம் தஞ்சை ஸ்ரீமத் குப்புசுவாமிராஜ் அவர்கள் அநேக வேதாந்த நூல்களை மொழிபெயர்த்து அதிலப் பிரியமாய் நடைபெற்றுவரச் செய்திருக்கிறார்கள். இன்னும் அநேகர் தெளிவாளிகளாயுமிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நீயே விசாரித்துக்கொள்.

சிஷ்:— சுவாமி நீர் சொல்லியபடி பிறப்புக்கு இச்சை காரணம் மெய்யாகத்தான் தெரிகிறது அதாவது உலகத்தில் நடக்கும் கிரியைகள் முதலிய காமிய தவங்கள் பூரூவும் பிறப்பைக் கொடுக்குமென்றும் விசாரரூபமான தற்பிரயத்தினமே பிறப்பை நசிப்பிக்குமென்றும் பிரசித்தமாயின. தோடு திருவள்ளுவநாயனாரும் "பற்றுக பற்றற்றான் பற்றினையப்பற்றை பற்றுக பற்றுவிடற்கு" யென்றும் பற்றற்றேற கண்ணே பிறப்பறுக்கு மற்றுநிலையாமை காணப்படும் என்றும் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்கள் ஆகையால் இது யாவற்றும் வெளியில் புலப்படாது புலப்பட்டால் வெளியில் அறியக்கூடியதுமானவை பிறப்பை நசிப்புக்கும் வழி இவற்றைவிட வேறில்லாததினால் பிரஹ்மவித்தை மேலென்றது ஒக்கும். ஆனால் கருமானுபவப்படி நடைபெற்றுவருகிறது வஸ்துப்பிரயத்தினமாகிய ஈஸ்பரதந்திரமாயிருக்கிறது. வேதாந்தநூல்முறைப்படி நடந்து பிறப்பைமாற்றிக்கொள்வது புருடப்பிரயத்தினமாகிய ஜீவதந்திரமாயிருக்கின்றது. இவற்றை நன்றாய் அறிந்துகொண்டேன். நமஸ்காரம்.

விடை;— அப்பா நீ மனம் ஒப்பி நமஸ்காரஞ் சொல்லியதாவது நாம் சொல்லிய விபரங்களையறிந்து மனஞ் சுத்தியடைந்தவனுனய் மேலும் திருநெல்வேலி ஸ்ரீமத் இராமசுவாமியாபிள்ளையவர்கள் திருவாய்மலர்ந்தருளிய வேதாந்த சாரசங்கிரகமெனப்படுந் தத்துவப்பிரகாசமென்னு நூலை வாசித்து தெளிவுபெறக் கேட்டுக் கருத்தையறிந்துகொள்வாய் ஏனென்றால் ஷ. நூலை ஷ. சுவாமியவர்கள் ஆத்மவிசாரப் பிரகரணம், ஆத்மவிசாரத் தெளிதற்பிரகரணமென இரண்டு அத்தியாயமாகச் செய்தருளியிருக்கிறார்கள். இது மிகவும் உண்மையை அறிவிப்பதாயிருக்கிறது ஆகையால் இதனை முதநூல் கற்றவுடன் தெறிந்துகொண்டால் பின்னர் வேதாந்த நூல்களைப் பார்க்க வெகு சுலபமாயிருக்கும்.

வினு;— சுவாமி தாங்கள் சொல்லிவந்த நூல்களிலிதனை விசேடித்துக் கூறுவானேன்.

விடை;— அப்பா நான் பார்த்துவந்த நூல்களிலெல்லாஞ் சொல்லாநின்ற கருத்துக்கள் யாவுஞ் சுருக்கி பிறப்பை மாற்றுந் தன்மைக்குரிய விசாரணை யெவ்வளவுவேண்டுமோ அவ்வளவே போதுமென்று சுவாமியவர்கள் தீர்மானித்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகையாலிதனை விசேடித்துக் கூறுவதாயிற்று.

வினு:— சுவாமி நான் முதலாவது தத்துவ விபரங்களைக் கற்று பின்னர் ஸ்திரஞானமடைவதற்கு இந்த நூலே போதுமாவென் றுவினவுகிறேன்.

விடை:— அப்பா போதும் ஏனெனில் சுவாமியவர்களும் இந்தக்கருத்துக்கொண்டுதான் பிரசுரித்தார்கள் இதனை நீயேயறிந்துகொண்டாய். மேலும் விசாரசாகரம் விருத்திப்பிரபாகரமுதலிய நூல்கள் உலகத்திலுண்டான மதாப்பேதங்களையும் நிலையின் ஸ்திரத்தன்மையையும் விசாரஞ்செய்யவேண்டியவைகள் எவ்வளவோ அவ்வளவையும் விரிவாய்த் தெரிவிக்கும் இந்த நூல் அப்படித் தெரிவிக்கிறதாயில்லையானுலும் உத்தமாதிகாரிக்கு எவ்வளவு போதுமானதோ அவ்வளவு மடங்கியிருக்கிறது. ஆகையாலிதை நான் விசேஷமாகச் சொன்னேன்.

வினு:— சுவாமி உத்தம மத்திப அதமமென அதிகாரியின் பேதங்கூறியபடி அவற்றின் நிலைமையையுங் கூறவேண்டும்.

விடை;— அப்பா இந்த அதிகாரி பேதம் எப்படியென்றால் குருநாயகன் சொன்ன உபதேசத்தை மெய்யாக மனதிற் திருப்திகொண்டு வேறு யாதொரு சங்கற்பங்களுமுண்டாகாமல் கேட்டபோதே ஸ்திரஞானப்படுவதுதான் உத்தமநிலை. யோகாப்பியாசமுதல் சர்வ கிரிகைகளையும் முடிப்பித்து ஞானப்பேற்றை அடைந்தாலல்லவா ஒப்பற்ற ஞானமாகுமென்று முயற்சைசெய்து சித்தியையடைந்தபின்னர் ஞானத்தையடைய விரும்புவது மத்திய நிலை. உலகத்திலுள்ள சாஸ்திரபேதம், மதபேதம், கிரியாபேதம், வஸ்துபேதம், நிலையின்பேதம் இவைகளையெல்லாங் கேட்டு மனம்ஒப்பி தெளிவுபிறந்தபின்னர் ஞானப்பேற்றை விரும்புவதுதான் அதமநிலை. ஆகையாலிந்த அதிகாரபேதங் கண்டுதான் ஞானசாரியர்கள் உபதேசிப்பார்கள் இதையறிந்து மேற்கூறிய வழிப்படி உன் மனது எந்தநிலைக்கு உடன்பட்டதோ அப்படிச்செய்!

வினா:— சுவாமி தாங்கள் சொல்லிய முறைப்படி குருவாக்கியங் கேட்டபோதே விசாரிக்கத் துணிந்தேன். இவ்விசாரணையை எனக்குச் சொல்லவும் அவற்றினிலையையடையவுங் கிருபைசெய்யவேண்டியது. நமஸ்காரம்.

குருசுவாமிகளை நோக்கி முறையிடுதல்

## முறையீடு.

அத்தனும் கிருஷ்ணநேந்தர வண்ணலைத் துதித்துயென்தன்
சித்தமே சுத்திசெய்து திறப்பட விசாரஞ்செய்து
மெத்தவா னந்தனுகி விளங்கிடா திருக்கவின்னம்
முத்தனே யிராமசுவாமி முறையோ முறையோ முறையேயோ.

உ

கணபதிதுணை.

## இந்நூலாசிரியரை வியந்துகூறிய தோத்திரம்.

## அந்தாதிப்பத்து.

விருத்தம்.

ஜகத்தினிற் கிருஷ்ட்ணநேந்தரர் சரணமென் றலமேற்கொண்டு
அகத்திருள் நீங்கவன்னே னடியவர் பதங்கள்போற்ற
மகத்திருள் மூடிப்பன்னுள் மறைத்திட்ட பவத்தைபோக்க
அகத்தருள் கொண்டுவென்னை யாட்கொண்ட வருளேபோற்றி (1)

அருளேயெல்லை யம்பலத்தி னடியார்பவத்தை யறவோக்கத்
திருவேவடிவங் கொண்டுவந்த தேஜோமயமே சிவக்கொழுந்தே
குருவேஇராம சுவாமியெனுங் குளுமைப்பெயரைக் கொண்டதினால்
மருளேவடிவாய் நிலைநின்ற மாயாப்பிறவி மயக்கறவே. (2)

மாயாப் பிறவி மயக்கறுத்த வுண்மைமனதி லுறுதிபெற
யொயிதனை யறியறிவா திருக்குரீயென் றறிவித்தே
நேயாவொருசொல் லிதுவென்றே நிலையைக்கூறி நிலைப்பித்த
ஆயாஇராம சுவாமியெனு மன்பாமறிவடி வானந்தமே. (3)

அறிவானந்த வடிவமெனை வறைந்தபொழுதே வருளின்பம்
பிறியாவிருக்க வருள்பெற்றேன் பேரானந்தப் பெருங்கடலே
குறியாலுணர்த்தக் குறிகொண்டேன் கோலவடிவே குணக்குன்றே
நெறியாரிராம சுவாமியெனும் நிருத்தனான நிர்மலனே. (4)

நிருத்தன்கருணைப் பெருங்கடலே நினைத்தபடிக்கின் கருளளித்த
கருத்தனான கண்ணுதலே கவலைதீர்த்த கற்பகமே
பொருத்தமான பூரணமே யான் புகன்றபடியே பொருளளித்த
பெருத்தவிராம சுவாமியெனும் பேரானந்தப் பெருஞ்சுடரே. (5)

சுடரேஞானப் பொரிக்கொழுந்தே சோதிமயமே சுகச்சோதி
தொடரேயெவரும் புரியும்படி தொன்றுதொட்டு வராநின்ற
இடரேவராம லருள்புரிந்த யிறையேயிராம சுவாமியெனுஞ்
சுடரேஞானச் சுகங்கொண்ட சோதித்தாளின் றுணை துணையே (6

துணையைக்கொண்ட வப்பொழுதே துன்புற்றிருந்த வன்பிறவிப்
பிணியைக்கோறி யெடுத்துவிடப் பிழைத்தேனெனவே பிலங்கொண்டே
அணையைக்கடந்து வன்றாளி லரக்கர்குலத்தை யறுத்துவிட்ட
கணையையுடையார் நாமமதைக் கணித்தாரிதனா லன்னைபிதா. (7)

அன்னைபிதாவென் றருளிறையை அனேகவிதமா யிறைஞ்சுகினும்
உன்னைப்பலவாஞ் ஜென்மவிடை உற்றுமாயா விசித்திரத்தை
என்னைக்குறிக்கொண் டப்போதே யெடுத்துவிட்டேன் மயங்காதே
உன்னைக்காண்பா யென்றனை வுறுதிவுறுதி பிறப்பறுமே (8)

அறுமேபிறப்பி னிறப்புமண்ட அறிவையானென் றுறுதிபெற
வருமேதன்னி னனந்தசுகம் வாடாதிருக்க வழியறிவைத்
தருமேயெனது வுண்மைநெறி தவராதிருக்க வருள்பெற்றேன்
திருவேஞானச் செகச்சோதிச் சிவனேநெல்லைச் சிவக்கொழுந்தே (9)

தொழுந்தேவிராம சுவாமியெனுங் கோலவடிவே குணப்பேறே
செழுந்தேனமிர்த மிகக்கொண்ட தித்திப்புடைய சிவலீலையே
விழுந்தேனினது பதந்தொழுது வெய்த்தேனறிவா யில்வேளை
எழுந்தாய்பாடல் பதந்தொழவே யிடர்கணீங்கி வின்புறுமே (10)

குருசுவாமிகளின் கருணையை வியந்து

நூலின் பிரயோசனங் கூறல்.

சொன்னதிராம சுவாமியெனுஞ் சுகவான்கொண்ட கருணையினா
லின்னதின்ன தெனவறியா வென்போலுள்ள தியாவர்கு
முன்னதறிவே வானந்த வுடைமைமற்ற தில்லையென
வுன்னத்தோன்று மிந்நூலி லுண்மையுண்மை வுலகினரே (1)

உலகைத்துச்ச மெனத்தோற்ற வுண்மையுடையா ரெப்போது
மலகைக்கூத்தென் றறைந்திடுவ ரறிவேவடிவ மல்லாது
பலவாய்ச்சொல்ல லறியாமை பரனேநீயென் றறிவித்த
குலனாமிராம சுவாமியெனுங் குருநூலினிய குணந்தருமே (2)

குணமாந்தத்துவப் பிரகாசக் குருநூலியாரு மெளிதறிய
பணமாய்க்கொள்வர் பலகாலும் பரனேயா னெனப்பகருங்
குணமாமறிவைக் கொடுக்குமெனக் கூறும்பெரியோர் குறிப்பித்த
மணமாஞ்சுகங்கள் மலைபோன்று மருவுமிந்நூல் மருவினர்க்கே (3)

குருசுவாமிகளை சுப்பிரமணியசுவாமிகளின்

துதிப்போடு வியந்து கூறல்.

தனத்த தானன தந்தன தானன
தனத்த தானன தந்தன தானன
தனத்த தானன தந்தன தானன தனதானா

சந்தவிருத்தம்.

செனித்த மாயைதன் னிருள்கடல் சுவறிட
தனித்த சங்கர ரருளிய நூல்வழி
மனத்தழுந்திடில் மாறிடும் பிறவிக ளினிதாக
நினைத்திடும்படி நீயருள் செய்திட
தனித்த வர்நிலை சகசமாய்க் கொண்டிட
தினைப்புனத்திடை சிறுநடங்கொளவருஞ் சிவபாலா

எனைப் பிறப்பிடை யிழுத்திடு மறதியை
நினைப்புங்கொண்டு நின் திருவருள் பெறவழி
நினைத்திடும்படி வுனைப் பலவழிமுறை துதிப்போடு
அனைத்தையும் விடு தனிப்படி நிலைபெறு
எனைச்சொனு பிரமசுவாமிதன் திருவடி
தினந்தொழும்படி யிறைபவர் தந்தருள்—பெருமானே

---

நான் குறிப்பிட்ட காரியம் நிறைவேறும்பொருட்டு
எவரால் காக்கப்பட்டதோ அம்மூர்த்தியைக் கூறல்.

## வெண்பா.

சங்கற்ப நாசமுறாத் தற்காக்கும் நாயகமே
கங்கைச் சடையுடையான் கற்பகமே—மங்கைநல்லாள்
பெற்றெடுத்த பேழைப் பெருவயிற்றோன் காப்பால்
கற்றறிந்தே னின் னாலைக் காண்.

முற்றிற்று.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 2 | ஆனந்தத்தையே | யாவரும் ஆனந்தத்தையே |
| ,, | 3 | விரதாதிமுதலிய | விரதமுதலிய |
| ,, | 4 | கோன்புகளென்று | நோன்புகளாலென்று |
| ,, | ,, | இருப்பிடத்தை | இருக்குமிடத்தை |
| ,, | ,, | தீரமானித்து | தீர்மானித்து |
| ,, | 5 | முயற்சை | முயற்சி |
| ,, | 6 | மிகவு | மிகவும் |
| ,, | 7 | விசாரிக்கப்படுவது | விசாரிப்பது |
| ,, | ,, | விவேகமென கூறுவது | விவேகமெனக்கூறுவது |
| ,, | 9 | பிரவற்த்தியை | பிரவர்த்தியை |
| ,, | 11 | மேலவர்களன்றி | மேலவர்களாலன்றி |
| ,, | 12 | மாவவி | மாவலி |
| ,, | ,, | தமக்குரிய | தக்கமக்குரிய |
| ,, | ,, | ஆசாரியிடமும் | ஆசிரியரிடமும் |
| ,, | 13 | யவர்ளிடமும் | யவர்களிடமும் |
| ,, | 15 | பிரவற்த்தியை | பிரவர்த்தியை |
| ,, | 17 | அறிதாய் | அரிதாய் |
| ,, | 20 | பெரு | பெறு |
| 2 | 15 | அமகுறிப்பை | அக்குறிப்பை |
| ,, | 30 | அலடய | அடைய |
| 3 | 3 | அசரியனா | ஆசிரியனை |
| ,, | ,, | நேந்தர் | நேந்திர |
| ,, | 6 | பெருக்குற்றெழுவது | பெருக்குற்றெழுகுவது |
| ,, | 8 | முயற்சை | முயற்சி |
| ,, | 9 | பிரவி | பிறவி |
| ,, | 21 | அபிவிர்த்தியை | பிரவர்த்தியை |
| ,, | 34 | விசாரளே | விசாரணே |
| 4 | 16 | நடத்திவைக்தனர்கள் | நடத்திவைத்தனர்கள் |
| ,, | 30 | விளஙகும்படி | விளங்கும்படி |
| 5 | 23 | அடைந்தனரான | அடைந்தனர்கள் |
| 6 | 18 | குமரனே | குமாரனே |
| ,, | 32 | யாருமறிந்து | யாருமறிய |
| ,, | 33 | மேவியணிந்து | மேவிப்பணிந்து |
| 7 | 17 | அபிறவி | அப்பிறவி |
| ,, | 19 | மெம் | மெனவும் |
| ,, | ,, | கெடுபதர்க்கு | கெடுப்பதற்கு |
| ,, | 27 | லெலாம் | லெல்லாம் |
| ,, | 30 | பரகாச | பிரகாச |
| 8 | 2 | யென்னி | சென்னி |
| ,, | 3 | உமக்கபம்பம் | உடக்கபயமபயம் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 8 | 8 | பாதாதிகேசம் | பாதாதிகேசம்வரை |
| ,, | 21 | வீடை | வீடடை |
| ,, | 30 | வா ா | வாயாக |
| ,, | 34 | வடிமே | வடிவமே |
| 11 | 2 | கைவல்லிநவநீதம் | கைவல்லியநவநீதம் |
| ,, | 15 | உயிரசார்பு | உயிர்ச்சார்பு |
| 12 | 22 | காமம மயக்கம் | காமம் வெகுளிமயக்கம் |
| 13 | 25 | சாயையெண | சாயையெனு |
| ,, | 26 | மாயையெரு | மாயையெனு |
| ,, | 28 | ஞானுதித்தன்றுனே | ஞானுதித்தனன்றுனே |
| 16 | 3 | பி மசத்தூக்கில்லை | பிரமத்துக்கில்லை |
| 17 | 5 | உன்னதமாக | மிகவும் உன்னதமாக |
| 18 | 6 | தானுவுமவிற்புருடனு | தானுவிற்புருடனு |
| 19 | 14 | யெதாத்தகம் | யெதார்த்தம் |
| ,, | 15 | அப்மடி | அப்படி |
| 20 | 1 | தாகந் | தாகக் |
| ,, | 17 | சப்பாதி | சாப்பாதி |
| ,, | 18 | மேற்கண்டவிவகாரங்களே | மேற்கண்டவிவகாரங்களே |
| ,, | 20 | யோகிக்காமலே | யோசிக்காமலே |
| ,, | 21 | விவரிக்கும் | விவகரிக்கும் |
| ,, | 29 | அசகத்தும் | அச்சகத்தும் |
| 21 | 6 | பலபொருள்ளாய் | பலபொருள்களாய் |
| ,, | 6 | இருகின்ற | இருக்கின்ற |
| ,, | 7 | காரூப | காமரூப |
| ,, | ,, | யெமையாகவோ | பொய்மையாகவோ |
| ,, | 6 | விளங்ய | விளங்கிய |
| ,, | 11 | அதைய்ப்பற்றி | அதைப்பற்றி |
| ,, | 14 | கைவல்லிநவநீதம் | கைவல்லியநவநீதம் |
| ,, | 20 | பிறங்களெல்லாம் | பிறங்கவெல்லாம் |
| ,, | 31 | தாவ்டந்தஙகள் | தாவ்டாந்தங்கள் |
| 22 | 19 | விருததிகள் | யிந்திரியவிருத்திகள் |
| 23 | 28 | ஒய்புகொண்ணன் | ஒப்புக்கொண்டனன் |
| 24 | 3 | உனக்குளே | உனக்குள்ளே |
| ,, | 7 | யூகித்துப்பார்த்தில் | யூகித்துப்பார்த்ததில் |
| ,, | 15 | இந்திரி விருத்திகள் | இந்திரியவிருத்திகள் |
| 27 | 4 | பிரகிருதியாகி | பிரகிருதியாகிய |
| 29 | 29 | தேவரின் | தேவரால் |
| 33 | 7 | பிரமம் கோவிலிலிருக்குமென | இந்தவாக்கியம்திருத்திவிடவும் |
| ,, | 19 | தேக்கந்திரிய | தேகேந்திரிய |
| ,, | 26 | பிகிருதியின் அவித்தைமுதல் | பிரகிருதிமுதல் |
| ,, | 35 | பேத | பதே |
| 34 | 22 | அபோரசசம் | அபரோச்சம் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 35 | 34 | உறைப்பாய | உரைப்பாய் |
| 36 | 23 | பறிமுதலான | கூடைபறிமுதலான |
| ,, | 24 | தெ ளிலகளில்களாயுள்ள | தொளில்களாயுள்ள |
| 37 | 19 | வம் | வும் |
| 38 | 7 | றரிந்து | றறிந்து |
| ,, | 20 | மாய் | மாய் |
| ,, | 28 | யாவும் | யாவும்விளங்குவதால் |
| 39 | 7 | திருதிசயனந்தம் | திரதிசயானந்தம் |
| ,, | 16 | சுருதிகளும் | சுருதிகளாலும் |
| ,, | 17 | மகத்துக்களும் | மகத்துக்களாலும் |
| 40 | 7 | கிறமம | கிரமம் |
| ,, | 15 | நினைப்பானது | நினைப்பினது |
| ,, | 18 | தோன்றுகிறதும் | தோன்றுகிறதும் |
| ,, | 23 | மூர்லான | முதலான |
| ,, | 28 | நினைப்பானது | நினைப்பினது |
| ,, | 29 | இஞ்சதநம் | கிஞ்சித்தும் |
| ,, | 31 | உளர்ந்தனேமே | உளாதனேமே |
| ,, | ,, | மாறைக்கர் | மாறைக்கா |
| 41 | 11 | நினைப்பக்கவ்வளவு | நினைப்புக்கவ்வளவு |
| ,, | 7 | யிருக்கின்றது | யிருக்கிறது |
| ,, | 23 | வாந்த | விசாரியாத |
| 43 | 2 | அந்தப்பொருள்களின் | அந்தப்பொருளின் |
| ,, | 21 | கூறப்படுகிறபடி | கூறியபடி |
| 44 | 21 | பாமரர்களாய் | பாமரர்களாகிய |
| 47 | 18 | கத்திவருகின்றனர் | கடத்திவருகின்றனர் |
| ,, | 2 | சான்திரப்பிரமாணம் | சாஸ்திரப்பிரமாணம் |
| 48 | 29 | நால் | நான் |
| 50 | 18 | பாதிக்கின்றதுன | பாதிக்கின்றது |
| ,, | 22 | நம்பிக் | நமபிக் |
| 52 | 8 | செல்வது | சொல்வது |
| ,, | 23 | நசிப்பிககுமென்னும் | நசிப்பிக்குமென்னும் |
| ,, | 29 | நசிப்புச்கும் | நசிபபிக்கும்வழி |
| 55 | 12 | குறிகொண்டேன் | குறிக்கொண்டேன் |

உ

கணபதி துணை.

# விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டுவோர்கள் திருநெல்வேலி கருவேலங்சண்டித்தெரு வைத்தியம் ந திருமலைக்குமாரு பண்டிதரிடத்திலும், மைலூரிலிருக்கும் சுவாமி சன்னதி மண்டபம் மகா-ள-ள-ஸ்ரீ டி வி வெங்கடேஸ்வரய்யரவர்கள் புஸ்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம். [வி பி சார்ஜ் பிரத்தியேகம்.]

1090-ம் ௵ சித்திரை மீ 23௳